Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-19 | 04-12-2004 | சனிக்கிழமை | ஓசை -290



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 விநாயகர் வீதி. மயிலிட்டி.

# நோர்வே தொடர்பான அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துமாறு ஐ.தே.க. கோரிக்கை!

## எரிக்கின் வருகையும் ஒத்திவைப்பு

**சமாதான நடவடிக்கைகள் தொடர்பான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசு தொடர்பான நிலைப்பாட்டை ஆளும் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி கோரியுள்ளது. இதேவேளை எதிர்வரும் ஆறாம் திகதி கொழும்பு வரவிருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்மின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவைபற்றித் தெரியவருவதாவது;**

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான ஏற்பாட்டாளர்களை நோர்வே மீது அரசாங்கம் தற்போது கொண்டுள்ள நிலைப்பாடுகள் பற்றிக் கூறுமாறு எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான மகிந்த சமரசிங்க பாராளுமன்றில் கேட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை வாதத்தின் போதே அவர் இவ்வாறு கேட்டுள்ளார்.

நோர்வேயின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக தெளிவற்ற நிலை தோன்றியிருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் ஆறாம் திகதி இலங்கைக்கு வரவிருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தனது பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

சூல்ஹெய்ம் கடந்த புதன் கிழமை லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப்பேசியிருந்தார். சுமார் இரண்டுமணி நேரமாக நடைபெற்ற இச்சந்திப்பில் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையில் தெரிவித்த விடயங்கள் குறித்து பாலசிங்கம் சூல்ஹெய்முக்கு விரிவாக விளக்கியிருந்தார்.

இதேவேளை நேற்றுக் கிளிநொச்சியில் அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## த.வி.கூ.உறுப்பினர் ஒருவர்மீது மற்றொரு உறுப்பினர் தாக்குதல்

### - யாழ் கூட்டணி அலுவலகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் என்பவர் அதே கட்சியின் உறுப்பினரான அரவிந்தன் என்பவரால் தாக்கப்பட்ட நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது வீ.ஆனந்தசங்கரியின் ஆதரவாளரான செல்லையா விஜயரட்ணம் என்பவர் யாழ்.நகரில் உள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் அலுவலகத்திலிருந்த வேளை இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் ஜீப் வண்டியில் மேற்படி அலுவலகத்திற்கு வந்தவரான கடந்த பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்ட வீ.ஆனந்த சங்கரியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுள் ஒருவரான அரவிந்தன் என்பவரே தாக்குதல் நடத்தியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இருவாகனங்கள் மோதிக்கொண்டதில் சாவகச்சேரியில் 8 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையச் சந்தியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்ற தனியார் சிற்றூர்தி, கன்ரர் வாகன விபத்தில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

முகமாலையிலிருந்து நிறைந்த பயணிகளுடன் கண்டி வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் சிற்றூர்தி ஒன்றும் யாழ்ப்பாணத்திலிருந்து அதே வீதியால் முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த கன்ரர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் இருவாகனங்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருப்பதுடன் இரு வாகனங்களினது சாரதிகளும் சிற்றூர்தியில் பயணித்த 6 பொதுமக்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு, கே.கே எஸ் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கு.சிவதீபன் (வயது-24), ஆணைக்கோட்டையைச் சேர்ந்த க.சிவனேசன், (வயது-21) அளவெட்டியைச் சேர்ந்த பு.தேவஞானி (வயது-35)

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யினரும் பௌத்த பிக்குவும் சிவப்பு,மஞ்சள் கொடிகளை அறுத்தெறிந்தனர்!

### திருமலைச் சம்பவங்கள் குறித்து எழிலன் விளக்கம்

(திருகோணமலை)

கடந்த இருபதாம் திகதி ஜே.வி.பியினரும், புத்தபிக்கு ஒருவரும் இணைந்த சிங்களக் குழுவினர் திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கொடிகள் இறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு மக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுத்தெறிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் மாவீரர் தினநிகழ்வின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பான விளக்கத்தை அளிப்பதற்காக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஊடகவியலாளர்களுக்கான கூட்டமொன்றை நேற்று நடத்தியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

*–பலாலி புறப்படவிருந்தவேளை–*

## குண்டுப்புரளி காரணமாக விமானம் 2 மணி நேரம் தாமதம்

45 பயணிகளை ஏற்றிக்கொண்டு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பலாலி விமான நிலையம் நோக்கி வருகை தந்த தனியார் விமானம் 2மணித்தியாலங்கள் தாமதமடைந்தது. விமானத்தில் குண்டு என்ற அனாமேதயத் தொலைபேசி அழைப்பையடுத்தே இத்தாமதம் ஏற்பட்டதாக சிவில் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் பின்னர் சிறிலங்கா விமானப்படையின் குண்டகற்றும் பிரிவினர் தலத்திற்கு விரைந்து குறிப்பிட்ட விமானத்தைச் சோதனையிட்ட போதும் குண்டெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து 8.30 இற்குப் புறப்பட வேண்டிய விமானம் இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகப் 10.30 இற்கே புறப்பட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெளிநாட்டிலிருந்து வந்த நண்பனை வரவேற்க கொழும்பு சென்றோர் சிறையில்

### - ஏழு பருத்தித்துறை இளைஞர்களுக்கு ஏற்பட்ட பரிதாபம்

ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து தாயகம் திரும்பிய நண்பரொருவரை ஏற்றி வருவதற்காக, பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச் சென்ற இளைஞர்கள் ஏழு பேர் காணாமற் போயுள்ளனர். ஆயினும் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மற்றோர் செய்தி கூறுகின்றது.

கடந்த மாதம் 30ஆம் திகதி பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த இவ் இளைஞர்கள் ஏழு பேரும் வாடகைக்கமர்த்தப்பட்ட ஹைஏஸ் ரக வாகனமொன்றில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காப் பொலிசாரால் இப்படியும் ஒருதொல்லை

(கொழும்பு)

கார்த்திகைத் தீபத்திருநாள் நிகழ்வுகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினமாகக் கருதி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்ட சம்பவம் இரத்தினபுரி உட்பட்ட மலையக பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. திருக்கார்த்திகைத் தினமும் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமும் கடந்த 26 ஆம திகதி அமைந்திருந்தது. இந்த நிலையில் அன்றைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் யுத்த நிறுத்த மீறல்களைக் கண்டித்து வவுனியாவில் மகஜர் கையளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்கா அரச படைகளின் யுத்த நிறுத்த மீறல்களைக் கண்டித்து வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால் நேற்று மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் இளைஞர்கள் சுடப்பட்டமை, மன்னாரில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உட்பட பொதுமக்கள் மீதான தாக்குதல், திருமலையில் தமிழ்மக்கள் மீதான தாக்குதல், வவுனியாவில் மாவீரர் தின நிகழ்வைப் படையினர் குழப்பி பொதுமக்கள் மீதும், போராளிகள் மீதும் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் என்பவற்றைக் கண்டித்து நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேற அனுமதிக்க முடியாது

### உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தையும் அதை அண்டிய அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் பொதுமக்கள் குடியேற அனுமதிக்க முடியாதென சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இதேவேளைஅதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் சாதாரண பொதுமக்களை குடியேற்றுவதன் மூலம் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுமென இராணுவத் தளபதிக்குப் பதிலாக அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி கூறியுள்ளார்.

## வரிவிளம்பரம்

### 2005 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

விசேட புலமைப்பரிசில் வகுப்பு, தரம் 6-11 வரையான வகுப்புக்கள்,விசேட சிங்கள வகுப்பு என்பன. 06.12.2004, மாலை 3.00 மணிக்கு கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், இல:-01 இல் ஆரம்ப மாகிறது.தகவல் நிர்வாகி. (4944)

### தவறவிடப்பட்டுள்ளது

ஊந்துருளியின் வரிச்சிட்டை மற்றும் மூவரது உள்நுழைந்த அனுமதிச்சிட்டை மற்றும் சிறு தொகைப் பணமும் கிளிநொச் சிக்கும், புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. எனவே கண்டெடுத்தவர்கள் கிளி. ஈழநாதம் பணிமனையில் ஒப்ப டைக்குமாறு மிக பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம். (5335)

### விற்பனைக்குண்டு

பாவனைக்குரிய 5லான்ட் மாஸ்டர்கள் விற்பனைக்குண்டு விலை நேரில் பார்த்து தீர்மானிக் கலாம். தொடர்புகளுக்கு S.உமா காந்தன் செல்வச்சுடர் பல்பொருள் உதிரிகள் வாணிபம்., கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5325)

### தவறவிடப்பட்டுள்ளது

ஸ்பிரிங்வளிகுருப்,பத்தேகம-2 ஆம் பிரிவை வசிப்பிடமாகவும், வீ.தமிழ்ச்செல்வன்(மகன்), கனகரத்தினபுரம், முத்துஐயன் கட்டை தற்போதையமுகவரி யாகவும் கொண்ட சரஸ்வதி சின்னையாவின் 507362451x என்ற இலக்கமுடைய ஆள் அடையாள அட்டை முகமாலை இராணுவ சோதனைச் சாவடிக்கும், பளை போக்குவரத்துக்கண்காணிப்பு நிலையத்திற்கும் இடையில் 22.11.2004 அன்று தவறவிடப் பட்டுள்ளது. (5065)

### கண்டெடுப்பு

கடந்த கிழமை இந்தியாவி லிருந்து தாயகம் திரும்பிய கெந்திக்கிலமன்ட் நாகபூசனி (வயது-23 முஸ்லிம் வீதி நாவாந் துறை) என்பவர் இந்தியாவிலிருந்து தலை மன்னார் ஊடாக வரும் சமயம் தனது பொதி ஒன்றைத் தவறவிட்டுள்ளார். தற்சமயம் இந் தப் பொதி தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் இருப்ப தாக கிராம உத்தியோகத்தருக்கு தகவல் வழங்கப்பட்டது. எனவே சம்பந்தப்பட்ட நபர் தனது அடையாள அட்டையைக் காண்பித்து கிராம அலுவலர் ஊடாக தலைமன்னார் பொலிசில் பொதியைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது. (18)

## பூநகரிப் பிரதேசத்தில் எயிட்ஸ் நோய் கருத்தரங்கு

பூநகரியின் தென்பகுதியில் உள்ள சுகாதாரத் தொண்டர்களிற் கான எயிட்ஸ் நோய் விழிப்புணர் வுக் கருத்தரங்கு கடந்த திங்கட் கிழமை சுகாதார வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தி தலைமை யில் பூநகரி ஜெயபுரத்தில் சுகா தார வைத்திய அதிகாரி பணிமனை யில் நடைபெற்றது. இக்கருத் தரங்கில் 24 பேர் பங்குபற்றினர்.

இதே எயிட்ஸ் நோய் சம்பந்த மான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மறுதினம் செவ்வாய்க்கிழமை பூநகரி கட்டம்I வைத்தியசாலை களிலும், நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் பூநகரி வட பகுதியைச் சேர்ந்த 19 சுகாதாரத் தொண்டர்கள் கலந்து கொண்ட னர். இவர்களுக்கான விரிவுரை களை பூநகரி பொதுச் சௌக்கிய உத்தியோகத்தர், ஜெயபுரம் பொதுச் சௌக்கிய உத்தியோகத் தர், பூநகரி சுகாதார கல்வி அதிகாரி தே. சுகந்தன் ஆகியோர் நடாத்தினர். இக்கருத்தரங்கில் எயிட்ஸ் நோய் சம்பந்தமான அறி குறிகள் பற்றியும் அதில் இருந்து எவ்வாறு விடுபடலாம் என்பது பற்றியும் விரிவாக விளக்கப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 25 பேருக்கும், வன்னியில் 2 பேருக்கும் இக் கிருமித் தாக்கம் உள்ளது எனலாம். காவிகளாக 450 பேர் வரையில் உள்ள னர் எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டது. (34)

### விபத்தில் சிறுமி பலி

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துச் சம்பவத்தில் 12 வயதுச் சிறுமியொருவர் உயிரி ழந்துள்ளார். மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் முதலாவது வாகன விபத்து காலை 8.00 மணியவில் திருகோணமலை ஊரணிப் பகுதியில் தனியார் பஸ்வண்டி யொன்று லொறியுடன் மோதிய தில் 5 வயதுச் சிறுமி உட்பட 15பேர் காயமடைந்துள்ளனர். இரண்டா வது சம்பவம் சேத்துக்குடா சுமைதாங்கியடி சந்தியில் முற்பகல் 11.00 மணியளவில் தனியார் பஸ் வண்டியொன்று துவிச்சக்கர வண்டியில் சென்ற சிறுமிகள் மீது மோதியதிலே மேற்படி திருநாவுக் கரசு சிந்துஜா என்ற மாணவி உயிரிழந்துள்ளார். காயமடைந்த சிறுமியின் சகோதரி சிகிச்சைக் காக வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

### விசேட சிகிச்சை

(அலுவலகசெய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி ஜெகராஜா அவர்களினால் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம் பலம் ஞாபகார்த்த வைத்திய சாலையில் நாளை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை பொது மருத்துவம், ஆஸ்துமா சம்பந்தமான நோய்களுக கான சிகிச்சைகளும் ஆலோசனை களும் வழங்கப்படவுள்ளது.

இதில் பயன்பெற விரும்பு பவர்கள் புதுக்குடியிருப்புப் பொன்னம்பலம் மருத்துவ மனை வெளிநோயாளர் பிரிவிற்கு சமூக மளிக்கும்படி கேட்டுக் கொண் டுள்ளனர். அன்றைய தினம் கிளிநொச்சி டாக்டர் பொன்னம் பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் மேற்படி சிகிச்சை இடம் பெறமாட்டாதெனவும், இச்சிகிச்சை பிரதி மாதந்தோறும் இடம்பெறும் என்பதனையும் மருத்துவமனை யினர் தெரிவித்துள்ளனர். (சோ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எம் பள்ளியின் பழைய மாணவனாய்- கால
தேவையறிந்து நற் சேவை செய்து
ஆற்றிய பணியால் அயராத உழைப்பால்- பார்
போற்றும் படியொரு நிலையிலின்று
ஏற்றமொன்று கண்டோம்!-ஆனந்தம் இன்னும்
ஆற்றுவாய் பல பணிகளென நம்புகின்றோம்.
உன் ஆசையுடன் எம் தேவையுடன் புது வேகமுடன்
சேவை செய்ய வாழ்த்துகின்றோம்! வாழ்க

பழைய மாணவர் சங்கம்–
புதுக்குடியிருப்பு.ம.வி

(10523)

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னி வாழ் மக்களும், பொது நிறுவனங்களும் பயன் பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 2222573

(5358)


## செழுமை குன்றா உன் 16 ஆம் ஆண்டின் நினைவோடு

### வீரவணக்கம்

தாயின் மடியில
22 ♣ 05 ♣ 1944



தாயக மண்ணில்
04 ♣ 12 ♣ 1988

### ஆசிரியர் நா.கருணானந்தசிவம்

நாட்டுப்பற்றாளர்(காங்கேசன் துறை)

செந்தழல் உமிழும் செந்தமிழ் நாவலன்
உயிரினும் மேலாய் தாயகப் பாசம்,
தமிழுக்கு உயிரென்றும் மண்ணுக்கு உடலெனவும்
மென்மையாய் வாழ்ந்து உயர்ந்தவனானாய்
இருண்ட காலத்தில் சுடரும் கதிரானாய்
அலைகள் ஓய்வதில்லை அது போல உன் நினைவு
உன் சுவடுபட்ட எம்மண்ணைக் காண
விரைவோம் உன் நினைவு பற்றி .......

**இலட்சிய வேங்கை இறப்பதுமில்லை**
**விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை"**

தேவிபுரம், புதுக்குடியிருப்பு.

இந்நிகழ்வு "இனிய வாழ்வு இல்லத்தில்" நடைபெறும்

குடும்பத்தினர்

(5064)

## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்(வ.து)

### பதவி வெற்றிடம்

கீழ்க் குறிப்பிடப்படும் சாரதி பதவிக்கு புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எல்லைப்பரப்பிலுள்ள நிரந்தர வசிப்பிடத் தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தாமாகவே விண் ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து எதிர்வரும் 2004.12.15 ஆம் திகதிக்கு முன் "தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக் குடியிருப்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவி:-** சாரதி (தற்காலிகம்)

**சம்.குறி.இல:-** 312/13

**சம்பள அளவுத்திட்டம்:-** 4000-75x10-80x10-5550/= அத்துடன் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் சம்பள அதி கரிப்பும் உண்டு.

**தகுதிகாண் காலம்:-** 6 மாதங்கள்

**தகைமைகள்**


01. 05 ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ்,லொறி, உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்துவதற்கேற்ப சாரதி அனுமதிப்பத்திரம் அத்துடன் 04 வருட அனுபவம்.
02. வயதெல்லை 30 இற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட வராக இருத்தல் வேண்டும்.
03. கொழும்பு சென்று வரக்கூடிய வாகனம் செலுத்துவதற் கேற்ப அனுபவம்.

தலைவர்,
மு/புதுக்குடியிருப்பு
ப.நோ.கூ.சங்கம்.(வ.து)
புதுக்குடியிருப்பு.

(சி.10521)

## கண்ணீர் அஞ்சலி

மாதாவின் மடியில்
14 ♣ 12 ♣ 1982



மண்ணின் மடியில்
26 ♣ 11 ♣ 2004

அமரர்

### பாலையா நிர்மலகாந்

திட்ட அலுவலகர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
முல்லை மாவட்டம்.

சிரித்தமுகம் எங்கே? சிங்காரப் பேச்சு எங்கே?
எம் உயிர் நிர்மலே
வாடாத மலராய் வாசந்தருவாய் என
நாம் எண்ணி இருக்க
காலச் சக்கரம் சுழன்று
உன்னைக் கொண்டு சென்றதடா?

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

த.பு.கழகம்
முல்லை.மாவட்டம்.

(5066)

# கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல் - 2005

கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குத்தகைகளுக்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் என்னால் 14.12.2004ஆம் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆகக்கூடிய கேள்வித்தொகையின் பிரகாரம் குத்தகைக்கானவர்கள் தெரிவுசெய்யப்படும்.

கேள்விப்படிவக் கட்டணம் ரூபா.500 உம் கேள்விவைப்புப் பணமாக ரூபா.1000உம் செலுத்தி 13.12.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரைகேள்விப் படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 14.12.2004 ஆம் திகதி பிற்பகல்11.30 மணிக்குத் திறக்கப்படும். சித்தியடையும் கேள்விக்காரர் உடனடியாக கேள்வியில் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி சபையின் நிபந்தனைக்கேற்ப ஒப்பந்தம் செய்துகொள்ளப்படல் வேண்டும். கேள்வித் தொகையின் மீதிப் பணத்தை எட்டு(8) சமபங்குகளாகப் பிரித்து சனவரிமுதல் ஆகஸ்ட் வரை மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.

கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்கள் குத்தகைக் கேள்விக்குப் பங்குபற்ற அருகதையற்றவராவர்.

கேள்வியை முழுமையாகவோ, பகுதியாகவோ, ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ விசேட ஆணையாளருக்கு/ செயலாளருக்கு அதிகாரமுண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்களை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும். அதன் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விபரங்கள் | மாத வாடகை | காலப்பகுதி | | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| | **முள்ளியவளை உப அலுவலகம்** | | | | |
| 01 | வற்றாப்பளைச் சந்தை | | 01.01.2005 முதல் 31.12.2005 வரை | | 15000.00 |
| 02 | முள்ளியவளை ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | ” | ” | 13875.00 |
| 03 | வற்றாப்பளை மாட்டிறைச்சிக் கடை | 250.00 | ” | ” | 15000.00 |
| 04 | முள்ளியவளை சந்தைக் கடை இல 1. | 250.00 | ” | ” | 7050.00 |
| 05 | முள்ளியவளை சந்தைக் கடை இல 2. | 250.00 | ” | ” | 8800.00 |
| 06 | முள்ளியவளை சந்தைக் கடை இல 3. | 250.00 | ” | ” | 8800.00 |
| 07 | தண்ணீரூற்று சந்தைக்கடை இல 2 | 250.00 | ” | ” | 14525.00 |
| 08 | தண்ணீரூற்று சந்தைக்கடை இல 3 | 250.00 | ” | ” | 14525.00 |
| 09 | தண்ணீரூற்று சந்தைக்கடை இல 4 | 250.00 | ” | ” | 14525.00 |
| | **செம்மலை உப அலுவலகம்** | | | | |
| 01 | குமுழமுனை மாட்டிறைச்சிக் கடை | 250.00 | ” | ” | 12550.00 |
| | **முள்ளிவாய்க்கால் உப அலுவலகம்** | | | | |
| 01 | முள்ளிவாய்க்கால் சந்தை | | ” | ” | 11880.00 |
| 02 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக் கடை | 250.00 | ” | ” | 28050.00 |
| 03 | மாத்தளன் ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | ” | ” | 7275.00 |

01. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைகள், கேள்விப் பத்திரப் பணங்கள் மற்றும் கடை வாடகை, மாதவாடகை ஆகியவற்றிற்கு வற்வரி 15% புறம்பாக செலுத்தப்படல் வேண்டும்.

02. சந்தைகளை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3%க்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

(இ.கிருஷ்ணபிள்ளை)
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-10522)



உலக உணவுத்திட்டப்பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனைச் சந்தித்தபோது..

## திறப்பு விழா

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிதம்பரபுரம் பிரதேச வைத்திய சாலையில்புதிதாக நிர்மாணிக்கப்பட்டமகப்பேற்றுவிடுதி வைத்திய அதிகாரி விடுதி என்பன நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குதிறந்து வைக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்ட மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், சதாசிவம்கனகரட்ணம்,சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்(10)




அறிவமுது பதிப்பகத்தின் புதிய வெளியீடுகளான "போர்உலா" "உண்மை மனிதனின்கதை" "பண்டிதர் நாட்குறிப்பேடு" "மனக்கோலம்" போன்ற நூல்களின் அறிமுகவிழாவில் சிறப்புரையாற்றும் தமிழ் நாடு விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தலைவர் தொல். திருமா வளவன்.

# கவனிப்பாரற்றுக்கிடக்கும் பள்ளிக்குடா பிரதான வீதி

(பூநகரி)

**பூநகரி A-32வீதியான மன்னார் வீதியில் இருந்து மேற்குப் புறமாகச் செல்லும் 4கிலோமீற்றர் நீளமான பள்ளிக்குடாவீதி குன்றும், குழியுமாகக் காணப்பட்டு போக்குவரத்துச் செய்யமுடியாமல் உள்ளது.**

இவ் வீதி திருத்துவதற்கு 4மாதங்களிற்கு முன்னர் கற்கள் நீர்ப்போக்கிகள் என்பன பறித்து இதுவரை திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பறிக்கப்பட்ட கற்கள் குவியலாகக்



காணப்படுவதால் மழை நேரத்தில் போக்குவரத்துச் செய்யமுடியாதுள்ளது. தற்பொழுதும் இக் குவியலுக்கு அண்மையில் கற்கள் காணப்படுகின்றன. இதனால் கடந்த 10 நாட்களாக எந்தவொரு பேருந்தும் பள்ளிக்குடாவிற்குள் வருவதில்லை. இதனால் பாடசாலை மாணவர்களும்,கர்ப்பிணித் தாய்மார்களும், குழந்தையுள்ள தாய்மார்களும் வைத்திய சாலைக்குச் செல்வதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இது விடயமாக உரியவர்கள் கவனம் எடுத்து வீதியைத் திருத்தித்தருமாறு மக்கள்வேண்டுகின்றனர். (34)

## வீதியை மூடி குளத்து நீர் பொது மக்களுக்கு அசௌகரியம்

(முல்லைத்தீவு)

மந்துவில் பிரதேசத்தில் உள்ள மணற் குளத்தில் மழை நீரானது அளவுக்கு மீறித்தேங்கி நிற்பதனாலும் பிரதான வீதியை மூடி வெள்ளம் பாய்வதனாலும் மக்கள்பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.இந்தக் குளத்தில் வருடாந்தம் [illegible] று இருப்பது வழக்கம். இதற்கான அணையோ அல்லது மேல[illegible] நீரை வேறுகுளத்திற்கு அனுப்புவதற்கான எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்ளாததினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இக் குளத்தினால் மக்களின் வீடுகளுக்குள்ள[illegible] வெள்ளம் புகுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (20)

## சூழல் சுற்றாடல் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மாணவர்களுக்கான சூழல் சுற்றாடல் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 08ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போருட்நிறுவனமும் கிளிநொச்சி கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும் மேற்படி சூழல் சுற்றாடல்பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் அனைவரையும் கலந்து பயன் பெறுவதுடன் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு போருட் வன்னி வெளிக்கள இணைப்பாளர் கா.சாந்தலிங்கம் வேண்டியுள்ளார். (சோ)

## சர்வதேச வெள்ளைப்பட்டிதினம்

(அலுவலகசெய்தியாளர்)

சர்வதேச வெள்ளைப்பட்டிதினம் கிளிநொச்சி மாவட்டத்திலும் மிகச் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு விழிப்புடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச ரீதியில் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 25ஆம் திகதி தொடக்கம் மார்கழி 10ஆம் திகதிவரை கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினரால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அனுஷ்டிக்கப்பட்டு இறுதியில் மார்கழி 09ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பெரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நகர்ப்பகுதி எங்கும் "வன்செயல் இல்லாத ஒரு சமுதாயத்தை ஆதரிப்பதற்காக தயவுசெய்து ஒரு வெள்ளைப் பட்டியை அணியுங்கள்" மற்றும் "வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கான உங்கள் ஆதரவை வழங்குங்கள்" "பெண்கள் மீதான வன்முறைகளை இல்லாதொழிக்கும் இலங்கை பிரச்சாரத்திட்டம்" என்ற கோஷங்கள் உள்ளடங்கிய பதாகைகள் வீதியோரங்களில் கட்டப்பட்டுள்ளன.

அத்துடன் ஒவ்வொரு நிறுவனங்களிலும் பணிபுரியும் ஆண், பெண் இருபாலாரும் கைகளில் வெள்ளைப்பட்டி ஒன்றை அணிந்து வன்முறை இல்லாத சமுதாயம் ஒன்றை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (கு)

## 'நிழல்' ஐப்பசி மாத இதழ் வெளி வந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழத்தின் வெளியீடான "நிழல்" இதழ் வெளி வந்துள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவரின் சிந்தனையைத் தாங்கி வரும் இவ் இதழில் போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான நலன் திட்டங்களை முழுமையாக விரிவுபடுத்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஏற்பாடு என்னும் முதன்மைச் செய்தியுடன் வெளிவந்துள்ள ஐப்பசி மாத "நிழல்" இதழில் வேலணையூர் சுரேஸ் எழுதிய கிராம. தரிசனத்தில் சமாதான காலத்திலும் அகலாத அகதி முகங்களும், அகதிமுகாம்களும் எனும் கட்டுரையும் தமிழர் புனர்வாழ்வுக்கழக முகாமைத்துவ ஆலோசகர் நாகநரேந்திரனின் செவ்வியுடனும் "பு.சத்தியமூர்த்தியின்" பாடாய்படுத்துகின்ற சிறு வீதிகள் எனும் கட்டுரையுடன் மேலும் பல செய்திகள், கட்டுரைகளைத் தாங்கிமேற்படி"நிழல்"இதழ் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கசிப்பு விற்றவருக்கு இரண்டு மாத சிறை

மல்லாவி நகரில் குஞ்சுக்குளம் கல்குவாரி பகுதியில் கடந்த 29-11-04 இரவு 7.30 மணிக்கு சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரை துணுக்காய் காவல் பணிமனையினர் கைது செய்து கசிப்பும் அது தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உற்பத்தி பொருட்களையும் மீட்டுள்ளனர்.இவர் பின்னர் மல்லாவி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதியாளரால் குற்றவாளிக்கு 2500/= குற்றப்பணமும் 06 மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 2மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. (24)

# இரணைமாதாநகர் கிராமத்தில் சமூக அபிவிருத்தித்திட்ட அறிமுகவிழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியீட்டத்தில் நிகொட் கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் திட்டஅறிமுகவிழா கடந்த திங்கட்கிழமையன்று பிற்பகல் 3.30 மணியளவில் இரணைமாதாநகர் கிராமத்தில் நடைபெற்றது.



தமிழர்புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம்,பூநகரிப்பிரதேச செயலாளர் மா.சிறீஸ்கந்தகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை , பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தலைவர் மூ.நவரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர் தொடர்ந்து தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார். மௌன வணக்கத்தைத் தொடர்ந்து நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத் தொகுதிக்குரியஅடிக்கல்லினை கிளிநொர்ச்சி மாவட்ட அரசாங்க அதிபர், இரணைமாதாநகர் பங்குத்தந்தை அருட்திரு.சே.வி.ஜேம்ஸ் அடிகளார் , பூநகரிப் பிரதேச செயலாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டப் பணிபபாளர் வ.றீகன், பூநகரி கால் நடைவைத்தியர் செ.கௌரிதிலகன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

முன்பள்ளிக்கான அடிக்கல்லினை கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர், நிகொட்திட்ட பொறியியலாளர் க.குகதாசன் ,கிளிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், இரணைமாதாநகர் அ.றோ.க.த.வித்தியாலய அதிபர் அ.கி.ஜெயசீலன், இரணைமாதாநகா கிராம சேவையாளர் பா.நகுலேஸ்வரன், கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் சூசைநாதன் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் தலைமையுரையினை தமிழர் புனாவாழ்வுக் கழக நிகொட் பகுதி இணைப்பாளர் க.ரவிக்காந் நிகழ்த்தினார். ஆசியுரையினை இரணைமாதாநகர் பங்குத்தந்தை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையினை பூநகரிப் பிரதேச செயலாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் பகுதி திட்டப்பணிப்பாளர் சி.சுடர், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். முதன்மை விருந்தினர் உரையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவர்களும், கௌரவ விருந்தினர் உரையினை கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரும் நிகழ்த்தினர். திட்டஅறிமுக நிகழ்வில் உரையாற்றிய திட்ட இணைப்பாளர் இரணைமாதாநகர் கிராமத்தில் 70 இலட்சம் ரூபா வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான அனுமதிகிடைக்கப் பெற்றுள்ளது. இத்திட்டங்கள் 18 மாதகாலத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் எனத்தெரிவித்தார்.

## சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதியன்று கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


மேற்படி நிகழ்வில் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கவுள்ளார்.

அனைவரும் கலந்து இந்நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் திருமதி சீ. ஆனந்தராசா கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)






எரிக்கப்பட்ட கடைகள்



(படங்கள் ஆன்சலின்)

# மிருசுவிலில் விசமிகளால் கடைகளுக்குத் தீவைப்பு

## -இரண்டு கடைகள் முழுதாய் எரிந்து நாசம்

(தென்மராட்சி)

**மிருசுவில் சந்தியில் இயங்கி வந்த பலசரக்குக்கடை ஒன்றும், உணவகம் ஒன்றும் நேற்று முன்தினம் இரவு ஒன்பதரை மணியளவில் இனம் தெரியாத நபர்களால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.**

குமார், மற்றும் முருகா என்பவர்களுக்குச் சொந்தமான கடைகளே எரியூட்டப்பட்டுள்ளன. இக்கடையில் இருந்த பலசரக்குப் பொருட்கள், மற்றும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை, வீட்டுக்கு எடுத்துச் செல்ல வைக்கப்பட்ட வீடியோக்கமரா ஒன்றும் இந்தச் சம்பவத்தில் முற்றாய் எரிந்து சாம்பலாய்ப் போய் உள்ளதாகவும் இதன் மதிப்பு ரூ 6 லட்சம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நடைபெற்ற பொழுது மேற்கொண்டு தீ பரவாமல் இருக்க பொது மக்கள் தடுப்பு நடவடிக்கை எடுத்ததால் அருகில் இருந்த நான்கு கடைகள் தீயின் தாக்கத்தில் இருந்து தப்பியுள்ளன. இது குறித்து கொடிகாமம் பொலிசார் மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (28)

# மோதலில் ஈடுபட்டு கைதான சந்தேக நபர்கள் விளக்க மறியலில்!

(வடமராட்சி)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் மற்றும் திருநகர் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவரை யாழ் பொலிசார் கைது செய்துள்ளனர். திருநகர் பகுதியைச் சேர்ந்தவரான அப்புச்சி என்பவர் உள்ளிட்ட இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர்.கைது செய்யப்பட்ட அப்புச்சி யாழ். நீதிமன்றிலும் மற்றைய சந்தேகநபர் நீதவான் வாசஸ்தலத்திலும் ஆஜர் செய்யப்பட்ட வேளை அவர்களிருவரையும் எதிர் வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை பதில் நீதவான் க.கேசவன் பிறப்பித்திருந்தார்.

இதனிடையே குருநகர், திருநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் முழுமையாக அமைதி நிலவியது எனினும் தொடர்ந்தும் பொலிசாரும் படையினரும் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை திருநெல்வேலிப் பகுதியினில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவமொன்றுடன் தொடர்புபட்டிருந்ததாகக் கைது செய்யப்பட்டமேலும் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை யாழ் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவையும் பதில் நீதவான் க.கேசவன் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் குருநகர்,திருநகர் பகுதிகளில் இடம் பெற்ற மோதலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோரது வாக்கு மூலத்தையும் பொலிசார் பதிவு செய்துள்ளனர். (27)

# சாவகச்சேரி நகரிற்கு குடிநீர் விநியோகிக்க நீர்த்தாங்கி அமைப்பு

சாவகச்சேரி நகரிலும் அதனை அண்டியபகுதிகளிலும் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதற்காக சாவகச்சேரி நகரசபை வளாகத்தினுள் நீர்த்தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

40 லட்சம் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்நீர்த்தாங்கியில் இருந்து குடிநீர் தட்டுப்பாடுகள் நிலவும் பகுதிகளுக்கு குழாய்மூலமாக குடிநீர் விநியோகிக்கப்படவுள்ளது.இதற்கான ஆயத்த நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றினால் ஒரு வருடகடூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண்ணொருவரை,தலா இரண்டாயிரத்து 500 பெறுமதியான ஆட்பிணையில் செல்ல யாழ். மேன் நீதிமன்று அனுமதியளித்துள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் 21ஆம்திகதியன்று இரவு வேளையில் யாழ். மத்திய பேருந்து நிலையப்பகுதியினில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடியதாகக் கூறி உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார் குறித்த பெண் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளையினில் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதவான் இ.த.விக்கினராசா அத்தண்டனையை கைதடி இரட்சணிய சேனையில் அனுபவிக்கவும் உத்தரவிட்டிருந்தார்.

எனினும் இத்தீர்ப்பிற்கெதிராக யாழ்.மேல்நீதி மன்றில் முறையிடப்பட்டிருந்த நிலையில் வழக்கு விசாரணைமீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பெண் மனநிலை பாதிக்கப்பட்டவரெனவும், அவர் தொடர்ந்தும் சிகிச்சை பெறவேண்டியதெனவும், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் அறிக்கையொன்றினை சமர்ப்பித்திருந்த நிலையிலேயே சந்தேக நபரை பிணையில் விடுவிக்க மேல்நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

# இதழ் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

அறிவுக்கதிர் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளியீடு எதிர் வரும் 7ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு மேற்படி அறிவுக் கதிர் சஞ்சிகையின் மூன்றாவது இதழினை வெளியிட்டு வைக்கவுள்ளார். (சோ)

# மின் விநியோகத்தில் தாமதம் மக்களிடையே பெரும் ஏமாற்றம்

(வடமராட்சிகிழக்கு)

பளைப்பிரதேசத்தில் மின்சாரம் பெறுவதற்கு பல மக்கள் மின்சார சபையிடம் விண்ணப்பித்தும் இன்னும் இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லையென்றும் தாம் மின்சாரம் பெறுவதற்கான மின்இணைப்புக்கள் செய்தும் பல நாட்களாய் மின்சாரத்திற்காக காத்திருப்பதாகவும் மக்கள் கவலையடைந்துள்ளனர். அத்துடன்வீதியில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் சில பழுதடைந்து பல நாட்களாகியும் அவைகள் இன்னும் திருத்தப்படவில்லை யென்றும் 20.11.2004 அன்று மக்களின் பாவனைக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று முதலில் அறிவித்தும் இன்றுவரை வழங்கப்பட வில்லையென்றும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (11)

# 8.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் தொழில்சார் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.ஈழவேந்தன், கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் 8இலட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதியை தமக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து வழங்கியுள்ளனர். இதில் கே.சிவாஜிலிங்கம் 5 இலட்சத்து 40ஆயிரம் ரூபாவும், கே.ஈழவேந்தன் 3இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

இந்நிதியிலிருந்து வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கான சந்தைப்படுத்தல் வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வடமராட்சி கிழக்கில் வீதியோர மீன்சந்தைகளால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் உள்ள வீதியோர மீன் சந்தையினால் வீதியினால் செல்லும் பயணிகள் பெரும் இடையூறுகளை எதிர் கொள்கின்றார்கள்.

மருதங்கேணி, வத்திராயன்,உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் மீன் சந்தைகள் இயங்கி வருகின்றன. இம்மீன் சந்தைகள் அனைத்தும் வீதியின் அருகே வீதியிலிருந்து 5 மீற்றர் தூரத்தில் உள்ள வெளியான இடங்களில் இயங்குகின்றன. இதனால் காலை 6.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை சந்தைகளின் முன் பெருமளவில் மக்கள் கூட்டம் நிற்பதனால் வீதியினால் செல்லும் வாகனங்கள் மிதிவண்டிகளில் செல்லும் பாடசாலை மாணவர்கள் பெரும் கஸ்ரத்தினை ஒவ்வொருநாளும் அனுபவித்து வருகின்றார்கள் இதனால் சில வேளைகளில் வீதி விபத்துக்கள் கூட நடந்திருக்கிறது. மேலும் நடப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.இவ்வீதியோர சந்தைகளை வீதியிலிருந்து அகற்றி வீதியினால் பயணம் செய்யும் பயணிகளுக்கு உரிய வழியை செய்து தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்இவ்வீதியினால்ஒவ் வொரு நாளும் பயணம் செய்யும் மக்கள் வேண்டி நிற்கிறார்கள். (11)

# மருதங்கேணி பொதுச்சந்தைக்கு சுற்றுவேலி அமைக்க கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கோணி பொதுச்சந்தைக்கு சுற்றுவேலி இல்லாததன் காரணமாக சந்தைக்கொட்டகை களில் கால் நடைகள் இரவு வேளைகளில் தங்கியிருப்பதனால் சந்தை முழுவதும் கால் நடைகளின் எச்சங்கள் துர்நாற்றம் விசுகின்றது. தற்போது இச் சந்தையானது வாரத்தில் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் இயங்குகின்றது. ஏனைய நான்கு நாட்களும் கால் நடைகளின் தங்குமிடமாக மாறியுள்ளதாகவும் இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து சந்தைக்கான சுற்று வேலியை அடைத்து கால்நடைகள் உட்செல்லாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வியாபாரிகள்கேட்டுக்கொள்கின்றார்கள். (11)

# நுளம்புகள் அதிகரிப்பு

பளைப்பகுதியில் நுளம்புகள் பெருக்கம் அதிகரித்துள்ளது தற்போது பெய்த கடும் மழைகாரணமாக நீர் அதிகம் தேங்கி நிற்கின்றது இதன் ஊடாக நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது உடனடியாக இது சம்பந்தமாக உரியவர்கள் நடவடிக்கை எடுத்து இப்பிரதேச மக்களை மலேரியாவிலிருந்து காப்பாற்றவேண்டும் என்று இப்பிரதேச மக்கள் வேண்டிநிற்கின்றார்கள்.(11)

# க.பொ.த (சா/த)மாணவருக்கு பாடரீதியான கருத்தரங்கு

றீடோ நிறுவனமானது நோர்வே நாட்டு மாணவர்களினதும் அபிவிருத்தி நிதியத்தினதும் நிதியுதவியுடன் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு பாடரீதியான கருத்தரங்குகளை ஒழுங்கு படுத்தி நடாத்தி வருகிறது.

முதல் நாளான நேற்று முன்தினம் பாலிநகர் வள நிலையத்தில் 140 மாணவர்களும், அறிவியல் நகர் வள நிலையத்தில் 300 மாணவர்களும்,கலந்துபயன்பெற்றனர். அதேபோன்று யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி வள நிலையத்தில் 340இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக இந்தக் கருத்தரங்குகள் 3நாட்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## - வைரவப்புளியங்குளத்தில் -

# படையினரின் வீதியோரக் காவலரண் இனந்தெரியாதோரால் தீ மூட்டி எரிப்பு


(வவுனியா செய்தியாளர்)

வைரவப்புளியங்குளத்தில் இருந்த படையினரின் வீதியோரக் காவலரண் ஒன்று கடந்த புதனன்று இரவு இனந்தெரியாதோரால் தீ முட்டி எரிக்கப்பட்டுள்ளது. வவுனியா புகையிரத நிலைய வீதியில் வைரவப்புளியங்குளத்தில் புளோட்அமைப்பின் அரசியல் அலுவலகத்திற்கு சமீபமாக படையினரால் அமைக்கப்பட்டிருந்த வீதியோர காவலரணே இனந்தெரியாதோரால் தீ முட்டி எரிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் கடந்தவாரம் பூந்தோட்டப் பகுதியில் படையினரால் புதிதாக அமைக்கப்பட்ட காவலரண் இனந்தெரியாதோரால் அழிக்கப்பட்டமையும், வேப்பங்குளத்தில் இருந்த காவலரண்கள் பொதுமக்களால் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (10)

# மணிக்கு 7 ஆயிரம் கி.மீற்றர் வேகத்தில் பறக்கும் விமானம்

தற்போதைய விமானங்களை விட மேலும் அதிவேகம் கொண்ட விமானங்கள் தயாரிக்கப்பட்டால் 2 மணித்தியாலத்தில் அமெரிக்கா சென்று அடைந்து விடலாம் நேரத்தை மிச்சம் பிடிப்போர் யாவரும் இதனைப் பெரிதும் விரும்பலாம்.

அவ்வாறான அதிவேக விமானம் ஒன்றைக் கண்டு




பிடிக்கும் ஆய்வில் அமெரிக்காவின் நாசா நிறுவனம் வெற்றி பெற்றுள்ளது. அது தற்போது தயாரித்துள்ள விமானம் மணித்தியாலத்துக்கு 7 ஆயிரம் கி.மீ.வேகத்தில் 1 இலட்சம் அடி உயரத்தில் பறந்து இறுதியில் பசுபிக் சமுத்திரப் பகுதியில் இறங்கியது. X-43 எனப் பெயர் கொண்ட இவ் விமானம் HYPER-X என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 230 மில்லியன் டொலர் செலவில் நிர் மாணிக்கப்பட்டதாகும் அதே போன்று இது இறுதியான ஆய்வு என்ற வகையில் நாசா நிறுவனம் கொண்டிருந்த நோக்கமும் இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆய்வு சுமார் 20 வருடகாலமாக நடைபெற்று வந்ததாக கூறப்படும் அதேவேளை பிரான்ஸ், யப்பான் நாடுகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

எவ்வாறேனும் இவ் விமானம் மக்களின் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாத போதும் மனித போக்குவரத்துக் கேற்ற விசாலமான விமானம் ஒன்றை நிர்மாணிக்கலாம் என்ற நம்பிக்கை ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் பூர்த்தியாகும் பட்சத்தில் 2015 ஆம் ஆண்டளவில் மனிதன் வெவ்வாய்க் கிரகத்துக்கும் செல்ல முடியும். எனினும் மேலும் பல புதிய ஆய்வுகளை நடத்தவும் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்யவும் தேவைப்படும் நிதி நிறுவனத்துக்கு ஒதுக்கப்படவில்லை. அதனால் இவ்வாறான ஆய்வுகளை தனியார் துறையினரிடம் ஒப்படைத்து ஊக்கப்படுத்தவும் நாசா எண்ணியுள்ளது.

தற்போது உருவாக்கப்பட்ட கலம் ரொக்கெட்டைப் போன்ற வேகமுடையதாயினும் வடிவத்தில் சாதாரண விமானம் போன்றதாகவே காணப்படுகிறது. இது ஸ்கிறேம் ஜெட் தொழிநுட்பத்தின் அடிப்படையில் வலுவானதும் சுப்பசோனிக் விமான இயந்திரத்தை விட சற்று விருத்தியடைந்த இயந்திரத்தினாலானதாகும் இது மேலும் விருத்தியாகும் போது 10 ஆயிரம் கி.மீ.வேகம் செல்லக் கூடியதாகவிருக்கும்.

இன்னும் ஒரு நன்மையாக இவ்வாய்வின் மூலம் இது வரை நிர்மாணிக்கப்பட்ட விண்கலங்களை விட சாதாரண விண்கலத்தின் உதவியுடன் அண்ட வெளியில் பயணம் செய்யலாம்.

மேற்படி ஆய்வு விமானம் 90 நிமிடங்களில் தனது ஆய்வுப்பணியை முடித்துக் கொண்டு வெற்றிகரமாக கடலில் சங்கமித்த நாள் விஞ்ஞானத்துறைக்கு கிடைத்த வெற்றிகரமான நாள் ஆகும்.

# கமரா மாத்திரை

மனிதர்களுக்கு உடலில் நோய்பிணி தாக்கும்பொழுதுநோய் முழு உண்மை பற்றி சில சமயங்களில் டாக்டர்களுக்குத் தெரிவதில்லை. இதனால் டாக்டர்கள் அளிக்கும் சிகிச்சையால் நோயாளிகள் குணமடைவதில்லை. பதிலாக பணம் தான் செலவழியும். இதனால் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன், எண்டாஸ்கோபி எத்தனையோ கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன.




தற்போது இதையெல்லாவற்றையும் விட கமரா மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பஸ் என்ற இந்த மாத்திரையை விழுங்கினால் உடலில் எந்தெந்த பாகத்தில் என்ன நோய்? என்ன பாதிப்பு? என்பதை படம்பிடித்து காட்டிவிடும். உடலின் உட்பகுதிகளை ஒவ்வொருபிரிவாகப் பிரித்து காட்டும்தன்மையுடையது இந்த ஒலிம்பஸ் கமரா மாத்திரை.

இந்த மாத்திரையை விழுங்கியவுடன் எதிரே இருக்கும் டி.வி.யில் அது படமாகத் தெரியும். இதன் மூலம் நோயை கண்டறிந்து டாக்டர்கள் எளிதில் சிகிச்சையளிக்கலாம். இந்த ஒலிம்பஸ் ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது2.6 செ.மீ. நீளமும் 1.1 செ.மீ.அகலமும் கொண்டது. இந்த கமரா மாத்திரை விரைவில் பரிசோதிக்கப்படவுள்ளது.

# புதியமீன் கண்டுபிடிப்பு

கடல் வாழ் மீன்களில் தேள் வகை கொண்ட ஒரு புதிய மீனைபிடித்து இருக்கிறார்கள். இந்த வகையான மீன்கள் மிகவும் அரிதான ஒன்றாகும் நூற்றுக்கணக்கில் மட்டுமே இவை உள்ளன. இந்த இனத்தை பெருக்குவது குறித்து கடல் ஆராய்ச்சியாளர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்

# செல்போன்களால் உடலுக்குத் தீங்கு?

10அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் செல்போன் பயன்படுத்துபவர்களுக்கு Acousticneuroma என்ற தொடக்க கால கட்டிகள் உண்டாகும் என்று ஐரோப்பாவைச் சேர்ந்த கரோலின்ஸ்கா என்ற பிரபல நிறுவனம் கூறியுள்ளது.

செல்போன் பயன்படுத்துபவர்களுக்கு தலைப்பகுதியில் காணப்படும் Auditory Nerve என்ற நரம்புகளில் (உள்காதையும், மூளை நரம்புகளையும் இணைக்கும் 8 நரம்புகளில் ஒன்று.) கட்டிகள் தோற்றுவதற்கான ஆரம்ப கால அறிகுறி தான் இது என்று அந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஆனால் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக செல்போன் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்து அதிகரிக்காது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும் இந்த ஆராய்ச்சி நடந்த சமயத்தில் பெரும்பாலும் அனலாக் செல் போன்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்போது ஜி.எஸ்.எம். எனப்படும் டிஜிட்டல் செல்போன்கள் தான் பரவலாக உள்ளன. இதனால் இந்த ஜி.எஸ்.எம். செல்போன்களுக்கு மேற்படி முடிவு பொருந்துமா? என்று சொல்ல முடியாது என்றும் ஒருசாரார் தெரிவிக்கின்றனர்.

செல்போன்களைப் பொறுத்தவரை பல காலமாக மனிதனுக்குப் பாதிப்பு ஏற்படுமா? இல்லையா? என்பது பற்றி அவ்வப்போது சந்தேகங்கள் கிளம்புவதும் பிறகு அடங்குவதுமாக உள்ளது. செல்போன்களால் மனிதர்களின் உடல் நலம் பாதிக்கப்படும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று செல்போன் நிறுவன அதிபர்கள் சொல்கிறார்கள். இந்நிலையில் தற்போதைய லேட்டஸ்ட் ஜி.எஸ்.எம். போன்கள் பற்றி அனலாக் போல விரிவான ஆராய்ச்சி செய்தால் தான் உண்மை விளங்கும்.

# மிகப்பழமை வாய்ந்த டைனோசர்

ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மிகப்பழமை வாய்ந்த டைனோசர் ஒன்றின் எலும்புக்கூடொன்றை அந்நாட்டு தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.



இது 225மில்லியன் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இனத்தைச் சேர்ந்தவை ஐரோப்பிய நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து பிரேசிலுக்கு வந்திருக்கலாம் என அலெக்சான்டர் கெல்னர் என்ற றியோடிஜனிரா பல்கலைக்கழக விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதன்படி கிழக்கு ஆபிரிக்கக் கண்டமும் பிரேசில் நாடும் தொடர்பு பட்டவையாக இருக்கலாம் என்றும் மேற்படி டைனோசர்கள் எவ்வித கஸ்ரமுமின்றி இடம் பெயர்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

# செவ்வாய்க்கிரகத்தில் மிதேன்வாயு கண்டுபிடிப்பு
## உயிரினம் வாழும் சாத்தியக் கூறுகள் அதிகரிப்பு

செவ்வாய்க் கிரகத்தில் மீதேன் வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்பு புதிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் வாழ்வதற்கு ஏற்ற சாத்தியக் கூறுகள் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். செவ்வாய்க் கிரகம் குறித்து விண்வெளி ஆய்வா ளர்கள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பூமிக்கு அடுத்தபடியாக மனிதன் வாழ ஏதுவாக சில காலநிலைகள் அங்கு காணப்படுவதாக முதலில் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி சூடுபிடித்தது. அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா அனுப்பிய ரோவர் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்ததற்கான சாத்தியக் கூறுகளை உறுதி செய்தது. இதனையடுத்து செவ்வாய்க்கிரகம் பற்றி ஆராய்ச்சி சூடுபிடித்துள்ளது. இந்நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் மீதேன் வாயு இருப்பதை சமீபத்திய ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. அமெரிக்க விண்வெளி நிறுவ னமான நாசாவின் மூன்றாவது ஆய்வுக்குழு நடத்தி முடித்த ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. அது போலவே செவ்வாய்க் கிரகத்தில் சில நுண்ணுயிரிகளும் இருக்கலாமெனக் கருதப் படுகிறது. அமெரிக்க வெண்வெளி அமைப்பின் ஒரு பிரிவான கோள் அறிவியல் அமைப்பு செவ் வாய்க் கிரகம் குறித்த விரிவான ஆய்வினை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆய்வுத் திட்டத்தில் பணியாற்றி வரும் மைக்கேல்மும்மா என்ற விஞ்ஞானி கூறுகையில் செவ்வாய்க் கிரகத்தில் மீதேன் இருப்பதை 99 சதவீதம் உறுதி செய்து விட்டோம். இது எந்த வகையான மீதேன் வாயு என்பதுகுறித்து ஆய்வு செய்து வருகிறோம். மீதேன் என்பது ஹைட ரோகார்பன் மூலக்கூறு இணைந்தது. இதில் ஒரு கார்பனும், நான்கு ஹைட்ரஜன் அணுவும் காணப்படும். இது எளிதில் அழியக்கூடியது. அதேபோல் அல்ட்ரா வயலட் போன்ற ஒளிக்கதிர் பட்டால் கூட இந்த மூலக்கூறு உடைந்து விடக் கூடியது என்றார்.

மீதேன் வாயு "இருப்பதால் செவ்வாய்க் கிரகத்தில் இரண்டு விதமான மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மீதேன் வாயு காரணமாக ஜியோ தெர்மல்வேதி மாற்றம் ஏற்பட்டு மஞ்சள் கற்கள் உருவாகும் அதேபோல் கடலின் அடியில் காணப் படும் உறைந்த தண்ணீர்க் கட்டிகள் தோன்றலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அது போலவே செவ்வாய்க் கிரகத்தில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதாக ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் மீதேன் வாயு காரணமாக மீதோஜென் என்ற பக்டீரியாக்கள் உருவாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் இதனை உறுதி செய்ய முடியவில்லை. இது குறித்து வோஷிங்டன் கத்தோலிக்க பல்கலைக்கழகப் பேராசிரியரும், செவ்வாய்க் கிரகம் குறித்து ஆய்வு செய்யும் ஒரு குழுவின் தலைவருமான விளாடிமிர் கிரஸ்னோகேஸ்கி கூறுகையில், "பக்டீரியா இருப்பது உறுதி செய்யப்பட்டால் செவ்வாய்க் கோள் குறித்த ஆராய்ச்சியில் பெரிய முன்னேற்றமாக அமையும். மனிதன் வாழத்தகுந்த கிரகமாக செவ்வாய் இருக்கிறதா என்பதே எங்களது நீண்டநாள் ஆராய்ச்சி. பக்டீரியா கண்டுபிடிக்கப்பட்டால் எங்கள் ஆய்வுக்குப் பெரும் ஊக்கமாக அமையும்" என்றார்.

ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் செவ்வாய் ஆய்வுத்திட்டமும் மீதேன் வாயு இருப்பதை உறுதி செய்துள்ளது. இதேபோல் ரோம் நகரைச் சேர்ந்த இயற்பியல் மற்றும் கோள்களுக்கிடையிலான அறிவியல் நிறுவனமும் செவ்வாயின் பல பகுதிகளில் மீதேன் வாயு இருப்பதற்கான சான்றுகளை சேகரித்துள்ளது. அதேபோல் செவ்வாயின் உட்பகுதியில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

-பாடசாலை அபிவிருத்தி நிர்வாக அமைப்புக்குறித்து-

# சனாதிபதி-ஜே.வி.பி பலத்த வாக்குவாதம்

# முடிவின்றி கலைந்தது அமைச்சரவை

(கொழும்பு)

**பாடசாலை அபிவிருத்தி நிர்வாக அமைப்பை நிறுவும் விவகாரத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், ஜே.வி.பி. அமைச்சருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்று இது குறித்து முடிவேதும் காணப்படாது அமைச்சரவை கலைந்தது.**

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த நிலை ஏற்பட்டது. இரவு சுமார் 10.00 மணியளவில் இந்த விடயம் அமைச்சரவையால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அது சுமார் இரண்டு மணிநேரமாக கடும் விவாதத்திற்குள்ளானது. இதன்போது சனாதிபதி பாடசாலை அபிவிருத்தி நிர்வாக அமைப்பு நிறுவப்படவேண்டியதன் அவசியம் குறித்து தீர்க்கமாக எடுத்துரைத்தார்.

எனினும் இந்தத் திட்டம் பாடசாலைகளைத் தனியார் மயப்படுத்தும் ஆரம்பத்திட்டமாகும் எனத் தெரிவித்த ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும், கலாசார அமைச்சருமான விஜித ஹேரத் அதனை அனுமதிக்க முடியாது என வாதிட்டார்.

இதனையடுத்து இரண்டு தரப்புக்குமிடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்ற நிலையில் இந்தத் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் முற்றுப்பெறாமல் அமைச்சரவைக் கூட்டம் கலைந்தது.

சனாதிபதி தாம் வைத்திருந்த ஆவணங்களையெல்லாம் தூக்கியெறிந்த நிலையில் தமக்கு தமது மக்கள் பாதுகாப்புத் தருவார்கள் எனவும், ஜே.வி.பி. தம்மைப் பாதுகாக்க வேண்டியதில்லை என்றும் ஆக்ரோஷமாகச் சத்தமிட்டுக் கூறினார்.

ஜே.வி.பி. சிறிய திட்டங்களைக்கூட எதிர்த்து வருகின்றமையானது விரும்பத்தக்கதல்ல என்றும் சனாதிபதி தெரிவித்தார்.

## பண்டாரநாயக்க குடும்பத்திற்கு ரவிராஜ் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறார்

*-அநுரா பண்டாரநாயக்க குற்றச்சாட்டு*

பாராளுமன்றத்தில் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்த கருத்துக்கள் தமது குடும்பத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகம் போற்றும் பண்டாரநாயக்க பரம்பரையை விமர்சித்து அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு ரவிராஜுக்கு எவ்வித உரிமையுமில்லை.

அதேநேரம் பண்டாரநாயக்க குடும்பம் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் தமிழ் மக்களுக்கு எவ்வித இம்சைகளும் ஏற்படவில்லை என்றும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இந்த நிலையில் கருத்துரைத்த சபாநாயகர் டபிள்யூ ஜே.எம் லொக்குபண்டார தற்போதைக்கு ரவிராஜின் உரை பாராளுமன்ற பதிவுப்புத்தகத்தில் உள்ளடக்கப்படாது எனத் தெரிவித்த அதே நேரம் குறிப்பிட்ட உரையை ஆராய்ந்த பின்னர் இறுதித் தீர்ப்பை அறிவிப்பதாகக் கூறினார். இதன்போது குறுக்கிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் அநுரா பண்டாரநாயக்க முன்னர் பல தடவைகள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வண்ணம் நடந்து கொண்டிருப்பதாக தெரிவித்தார். இந்தக் கருத்தை அடுத்து ஆளும் கட்சியினருக்கும் மகேஸ்வரனுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கேட்கும் கேள்விகளுக்கு எந்தப் பதிலையும் அளிப்பதில்லை என அரசாங்க கட்சியின் பிரதம முதல்வர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். சனாதிபதியைப் பற்றி அவர் கூறிய கருத்துக்கள் யாவும் பாராளுமன்ற நிலையியற் கட்டளையை மீறும் செயலாகும் என அரசாங்கக் கட்சியினர் குற்றம் சுமத்தினர்.

## யுத்தத்தில் ஊனமுற்ற படையினர் அரசாங்கம் மீது அதிருப்தி

யுத்தத்தினால் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் தங்களுக்குரிய ஓய்வூதியத்தை உடன் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கையை மீண்டும் முன் வைத்துள்ளார்கள்.

இந்தக் கோரிக்கையை முன் வைத்து நேற்று இராணுவ தலைமையகத்திற்கு முன்பாகக் கூடிய ஊனமுற்ற இராணுவத்தினரைக்கொண்ட சங்கப் பிரதிநிதிகள் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்குச் சென்று இது பற்றிய மகஜரொன்றை கையளிக்கவிருந்த போதிலும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ அங்கு இல்லாத காரணத்தினால் அது சாத்தியப்படவில்லை. இதனையடுத்து அவர்கள் அதிருப்தியடைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ தலைமையகத்திலிருந்து அலரி மாளிகை வரை சக்கர நாற்காலிகளில் இந்தப் படையினர் சென்றிருந்தார்கள். பிரதமர் அங்கு இல்லாத நிலையில் தங்கள் மகஜரை பாரளுமன்றத்தில் அவரை சந்தித்து கையளிக்க குறிப்பிட்ட சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளார்கள். இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் அசோகா தயாரத்ன கருத்து வெளியிடுகையில், ஆட்சியிலிருந்த மற்றும் தற்போது ஆட்சியிலிருக்கும் ஆட்சியாளர்கள் மீது கடுமையான அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருட சேவையின் பின்பு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகின்றார்கள். ஆனால் நாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்து ஊனமுற்ற இராணுவ வீரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு 12 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக சகல அரசாங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திய போதிலும் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை. அரசியலே யுத்தத்தை தீர்மானித்தது. அரசியலுக்காகவே யுத்தம் செய்ய நேரிட்டது. யுத்தம் அரசியல் நோக்கத்தைக் கொண்டது. அரசியல்வாதிகளின் சுயலாப போக்குகளினால் தான் இந்த நாடு யுத்த பூமியாகியது.

எந்த அரசியல் கட்சியை எடுத்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை விட யுத்தத்தை முன் வைத்தே அன்றும் சரி இன்றும் சரி அரசியல் வேலைத்திட்டங்களை தீர்மானிக்கின்றார்கள். கடந்த 20 வருட கால யுத்தத்தில் பல ஆயிரக் கணக்கான இராணுவத்தினரும், பொலிசாரும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் பணக்காரர்கள் அல்ல, ஏழைகள். ஊனமுற்றுள்ளார்கள். ஊனமுற்றவர்களைப் பற்றி எவரும் இப்போது நினைத்துப் பார்ப்பதில்லை. தற்போது யுத்தநிறுத்த சூழல் நிலவுவது மகிழ்ச்சிக்குரியது. இதன் காரணமாக கடந்த இரண்டு வருட காலங்களாக படையினர் உயிரிழக்கவில்லை. அவர்களின் மனைவிமார்கள் விதவைகளாகவில்லை. ஏழைப் பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கவில்லை. இராணுவத்தினர் ஊனமடையவில்லை என்றார்.

## சந்தேக நபரை மூன்றுநாட்கள் தடுத்துவைத்து விசாரணைக்குட்படுத்துவது மனிதஉரிமை மீறல்

-மட்டு.காந்தி சேவாசங்கத் தலைவர் சனாதிபதிக்குக் கடிதம்

குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தம் செய்து குற்றம் இழைத்தவராக சந்தேகிக்கப்படும் நபரை மூன்று நாட்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தும் சட்ட திருத்தம் மனித உரிமைகளைப் பாதிக்க வழி வகுக்குமென மட்டக்களப்பு காந்திசேவா சங்கச் செயலாளர் கதிர்பாரதிதாசன் சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட நபர்கள் இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் நீதிமன்ற நீதிபதியின் முன் நிறுத்தப்படாமல் இராணுவ முகாம்களிலும், தடுப்பு முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும், ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதுடன் படையினரால் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். இதற்கு அக்கால கட்டத்தில் இருந்த சட்டங்களே காரணமாகும்.

தற்போது அச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சனாதிபதி உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க நான்கு தொழிற்சங்கங்கள் கோரிக்கை

"தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையின் படி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வழங்கி தேங்கியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி நான்கு தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு நீண்ட மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளன.

வட-கிழக்கு மாகாண அரச ஊழியர் சங்கம், வட-கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம், அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கம், அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி ஆகிய நான்கு அமைப்புகளின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை உவெஸ்லி கல்லூரியில் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. அங்கு மேற்படி தீர்மானம் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றில் முக்கிய தீர்மானம் மேற்படி சனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில தீர்மானங்கள் வருமாறு;

வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் கடமை நேரத்தை 9 மணிநேரம் நீடிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்தலுடன், அதனை வாபஸ் பெறுமாறும் கோரல்.

வட-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தும் தலைவர் லோகநாதனை மண்டபத்துள் அனுமதிக்க விடாமல் தடுத்த அமைச்சின் செயலாளர் கமலாசிவசிதம்பரத்தின் மனிதாபிமானமற்ற நரித் தனமான நடவடிக்கையைக் கண்டித்தல். - கல்முனை மாநகரசபை ஊழியர்களின் கோரிக்கைகள் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுத்தல், அதற்கான முன்னறிவித்தலை மாநகர ஆணையாளருக்கு அறிவித்தல். - வட-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் வரை விசேட சேவையாளர்களைச் சார்ந்த பாடசாலைப் பணியாளர்களுக்கும், 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பதவியுயர்வு வழங்கி இடமாற்றம் செய்யக் கோருதல். மன்னார், வவுனியா, திருமலை மாவட்ட வன்முறைகளை வன்மையாகக் கண்டித்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஜே.வி.பி, ஈ.பி.டி.பி.கூட்டாக பாக். தூதுவரை சந்தித்துப் பேச்சு

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கோரிக்கை பாரதூரமானது எனவும் அதனால் தமது அரசாங்கம் அதனை நிராகரிப்பதாகவும் பாகிஸ்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் இஸ்டியாக் தன்னைச் சந்தித்த ஜே.வி.பி.தலைமையிலான குழுவினருக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் பங்களாதேஷ் உடனான போரின் போது இலங்கையே தமக்கு எரிபொருள் நிரப்பும் மையமாக இருந்தமையால் இலங்கைக்கு தாம் எப்போதும் உதவத்தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்த குழுவில் ஈ.பி.டி.பி. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணி, புளொட் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சிங்கள அடிப்படைவாதிகளும் பங்கேற்றனர்.



கண்காணிப்புக்குழுவின் திருமலை அலுவலகத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் நடத்திய சந்திப்பு.

## இருநாள் கருத்தரங்கு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு ஊடகத்துறை தொடர்பான இருநாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. ஊடகவியலாளர்களின் கடமைகளும் பொறுப்புக்களும், ஊடகத்துறையின் உரிமைகள், ஊடகப் படப்பிடிப்பு ஆகிய விடயங்களை உள்ளிட்ட இவ்விருநாள் செயலமர்வு இன்றும், நாளையும் நடை பெறவுள்ளதாக இலங்கை இதழியல் கல்லூரியினர் அறிவித்துள்ளனர். (10)

## காணி குறித்து வலிதான ஆவணம் இல்லாதோர் கவனத்திற்கு

அரச காணிகளில் குடியிருக்கும் நபர்கள் அக்காணி சம்பந்தமான வலிதான ஆவணம் இல்லாவிடில் அல்லது வழங்கப்பெற்ற ஆவணம் தவறவிடப்பட்டிருப்பின் மற்றும் 1995ஆம் ஆண்டிற்கு முன்பாக அத்து மீறிப் பிடித்த காணியினைச் சீர்ப்படுத்தலில் பிரச்சினை ஏற்பட்டிருப்பின் உடன் அந்தந்தப்பகுதிக் கிராம சேவை அலுவலர்கள் அல்லது கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 31.12.2004 இற்கு முன் காணி அலுவலகத்தில் ஒப்படைக்கும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினி வேண்டுகை விடுத்துள்ளார்.(சோ)


## மேஜர் முரளி முன்பள்ளி

### பரவிப்பாஞ்சான்-கிளிநொச்சி

☐ மேற்படி முகவரியில் அமைந்துள்ள முன்பள்ளியின் 2005ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

☐ வயது 31.12.2004 இல் அல்லது அதற்கு முதல் 03 வயதினைப் பூர்த்தி செய்தவர்களும், 04, 05 வயதிற்குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

☐ விண்ணப்பங்கள் 15.12.2004 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

☐ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

☐ விண்ணப்பப் படிவங்களும் மேலதிக விபரங்களும் கீழ்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்

நடுவப்பணியகம்,
தமிழீழ மாணவர் அமைப்பு,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(5332)

## பகிரங்க ஏல விற்பனை

"யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்திலுள்ள (பழைய பூங்கா) பட்ட மலை வேம்பு04, முதிரை மரம்-01 என்பன 2004.12.18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏல் விற்பனையில் குறிப்பிட்ட மரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றை தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களைப் பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

செ. பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்

(சி.10845)

### உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப்படும் வடக்கு-கிழக்கு வீடமைப்புப் புனர் நிர்மாணத்திட்டம்

அரச காணிகளில் குடியிருக்கும் நபர்களுக்கு அக்காணி சம்பந்தமான வலிதான ஆவணம் இல்லாவிடின் அல்லது வழங்கப்பட்ட ஆவணம் தவறியிருப்பின் அல்லது உரிமை கோருவதில் ஏதும் பிரச்சினை இருப்பின் அல்லது 15.06.1995 இற்கு முன் அத்துமீறிப் பிடித்த காணியினைச் சீர்ப்படுத்தலில் ஏதும் பிரச்சினை இருப்பின் மாதிரிப் படிவத்தினை அந்தந்த கிராமசேவை அலுவலரிடம் அல்லது கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து 31.12.2004இற்கு முன் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

க. சுலோஜினி,
உதவி அரசாங்க அதிபர், பி.செ,
கரைச்சி,கிளிநொச்சி.

(சி.10844)

## பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டதாகவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் " தலைவர், வவுனியா வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ, நேரடியாகவோ 20.12.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் கடமைக்குச் சேரும் போதே ரொக்கப்பிணை ரூபா பத்தாயிரமும், ஆதனப்பிணை ரூபா. பத்தாயிரம் செலுத்தல் வேண்டும்.

01. பதவி: கணக்காளர் 104/09
சம்பளத்திட்டம்:
6250.00 -10 X 110 -10 X 120 = 9010/-
75000.00 -10 X 1320 -10 X 1440 =102600/-

வயதெல்லை: 18-45 வருடங்கள் சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

கல்வித்தகைமை:

அ. கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப்பணியாளர் 11 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது. ஆறுவருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப்பதிவாளர் இறுதிப்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/ கணக்காய்வுத்துறைப் பதவியொன்றில் மேற்பார்வைத்தரத்தில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், அல்லது ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப்பதிவாளர் இடைநிலைப்பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு/கணக்காய்வுத்துறைப் பதவி ஒன்றில் மேற்பார்வைத்தரத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

அல்லது

இ. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம்/க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு/ கணக்காய்வுத்துறையில் மேற்பார்வைத்தரத்தில் 4வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

02.கிளைமுகாமையாளர்: 165/ 88-13
ஆண்கள் மட்டும்

சம்பளம்:
5250.00 -75.00 X 10 - 80 X 10 = 6800/-
63000.00 - 900.00 X 10 - 960.00 X 10=81600

வயதெல்லை: 18 - 45 வரை
கல்வித்தகைமை: க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில்

1. தமிழ் பாஷை, கணிதம் 1/கணிதம் 2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன ' பட மூன்றுபாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர் தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1 / கணிதம் 2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக் கப்படும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி

(சி.10847) திகதி-02.12.2004

### வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி

## செத்தல் மிளகாய் பகிரங்க ஏல விற்பனை

மேற்படி எமது சங்கத்தில் இருப்பாக இருக்கும் நல்ல தரமான ஐயாயிரம் கிலோ செத்தல் மிளகாய் 11.12.2004 ஆம் திகதி பகல் 12.00 மணிக்குத் தலைமைப்பணிமனை மண்டபத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. செத்தல் மிளகாயைப் பார்வையிட விரும்புபவர்கள் காரியாலய நாட்களில் காரியாலய நேரத்தில் வந்து பார்வையிடலாம் ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் மீளளிக்கப்படும் வைப்பாக ரூ.5000/- மும் மீளளிக்கப்படாத வைப்பாக ரூ.500/=ம் செலுத்தியிருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் அன்றையதினமே முழுப்பணமும் ரொக்கமாகச் செலுத்திச் செத்தல் மிளகாயைப் பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஏல விற்பனைக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.
02.12.2004

வி.குகராசா
தலைவர்.

(சி.10848)

# பாக்தாத்தில் இருவேறு தாக்குதல்கள் 16 பொலிசார் உட்பட 30 பேர் பலி!

## -பொலிஸ் நிலையம் மீது அதிரடித் தாக்குதல்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற இருவேறு தாக்குதல்களில் 16 ஈராக்கியப் பொலிசார் உட்பட முப்பது பேர் கொல்லப்பட்டனர். பள்ளிவாசல் ஒன்றிலும், பொலிஸ் நிலையம் ஒன்றிலும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன.**



கார்க்குண்டு வெடிப்பு

பொலிஸ் நிலையம் மீது அதிரடியாக தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியிருப்பதாக அமெரிக்க படைத் தரப்பை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி இரு தாக்குதல்களுக்கும் அபு முசாப் அல்-சர் அவிப் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்.

ஈராக் அரச படைகளிற்கும் தீவிரவாதிகளிற்கும் இடையில் அல்-நசார் பள்ளிவாசலிற்கு அண்மையில் மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது ஒரு கார்க் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இதில் 14 பேர் கொல்லப்பட்டதுடன், 19 பேர் காயமடைந்தனர். மற்றைய தாக்குதலில் இம்மாவட்டத்தில் தீவிரவாதிகள் பாக்தாத் சர்வதேச விமான நிலைய வீதிக்கு அண்மையாக அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத் தாக்குதலில் 16 பொலிசார் கொல்லப்பட்டதுடன் பல பொலிசார் காயமடைந்துள்ளனர். ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஜிம்கற்ரன் தெரிவிக்கையில்; 11 கார்களில் வந்த ஆயுததாரிகள் பொலிஸ் நிலையம் மீது றொக்கற், கைக்குண்டு மற்றும் சிறிய ரக ஆயுதங்கள் மூலமாகத் தாக்குதலைத் தொடங்கியதாகவும் குறிப்பிட்டார். அமெரிக்க படையினரைக் காவும் வாகனமான "கம்வீ" என்ற வாகனமும் சேதத்திற்குட்பட்டுள்ளதாகவும் ஆனால் அமெரிக்கப் படையினர் எவரும் இறக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.



பாக்தாத்தினுடைய ஜாமொக் வைத்தியசாலையிலிருந்து இறந்த பொலிசார் ஒருவரின் சவப்பெட்டியை வெளியே அழுதபடி காவிவரும் உறவினர்கள்.

## அமெரிக்கா தடை

(வோஷிங்டன்)

ஈரானுக்கு அணு ஆயுத தொழில் நுட்ப இரகசியங்களை விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட 4 சீன நிறுவனங்கள் மீதும் ஒரு வட கொரிய கம்பனி மீதும் அமெரிக்கா தடை விதித்துள்ளது.




ஈராக்கின் தெற்குப் பகுதியில் உக்ரே[illegible]யன் இராணுவ வீரர்கள் ஒரு இராணுவ வாகனத்தின் பின்னால் பாதுகாப்பிறகாக நிலையெடுத்து நிற்கின்றனர். உக்கிரேன் பாராளுமன்றத்தில் ஈராக்கிலிருந்து 160 உக்கிரேன் படையினரை மீளப் பெறுவதை வற்புறுத்தி வாக்களிக்கப்பட்டுள்ளது.

### -ஒரு மாதத்தில் பிலிப்பைன்ஸில்-

# புயல், மழை, நிலச்சரிவில் சிக்கி ஆயிரத்துக்கும் மேலானோர் பலி!

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த மாதம் தொடர்ந்து பெய்த பலத்த மழையில் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான கிராமங்கள் மூழ்கியது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், நிலச்சரிவு ஏற்பட்டு மண்ணில் புதைந்தும் 600 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். இந்தத் துயரத்தில் இருந்து மீள்வதற்குள் பிலிப்பைன்சின் அரோரா உட்பட பல்வேறு மாகாணங்களில் சூறாவளி காற்றுடன் மீண்டும் பலத்த மழை கொட்டியது. இதிலும் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டன. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் மண்ணில் புதைந்து பலியானார்கள். கடந்த ஒரு மாதத்தில் புயல், மழை, நிலச்சரிவில் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகி விட்டனர்.

# மரண தண்டனை நிறைவேற்றம் இறுதி நேரத்தில் நிறுத்தம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஹுஸ்டன் நகரைச் சேர்ந்த பெண் பிரான் சஸ்நியுட்டன் (வயது-39) என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. அதை நிறைவேற்றுவதற்கு ஒரு சில மணி நேரத்துக்கு முன்பு டெக்சாஸ் ஆளுநர் ரிக்பெர்ரி தடை விதித்தார்.

1987 ஆம் ஆண்டு கணவனையும், 2 குழந்தைகளையும் ஒருகோடி ரூபாய் காப்புறுதி பணத்துக்காக சுட்டுக்கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்னதாக 4 மாதத்துக்கு அதை நிறைவேற்றக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. டெக்சாஸ் மாநில மன்னிப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் ரிக்பெர்ரி இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். இந்த 4மாதத்துக்குள் பிரான்சஸ் தரப்பு அவர் குற்ற மற்றவர் என்பதை நிரூபித்தால் அவர் விடுவிக்கப்படுவார்.

# ரஷ்ய சனாதிபதி நேற்று இந்தியா வருகை இருதரப்பு உறவுகள் குறித்து ஆராய்வு!

## கூட்டு ஏவுகணைத் திட்டமும் ஆரம்பம்

(புதுடில்லி)

ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புடடின் இந்தியாவில் மூன்றுநாள் சுற்றுப்பயணம் செய்கிறார். இதற்காக நேற்று அதிகாலை 2மணி அளவில் புட்டின் விமானம் மூலம் டில்லி வந்தார். அவருடன் உயர்நிலை குழுவும் டில்லி வந்துள்ளது. டில்லி விமான நிலையத்தில் புட்டினை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், வெளியுறவுத் துறை செயலாளர் ஷியாம் சரண், ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் கன்வால் சிபல் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.



சனாதிபதி புட்டின் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்றையதினம் சந்தித்துப் பேசினார். இந்தியா-ரஷ்யா இடையே இரு தரப்பு உறவுகள், சர்வதேச பிரச்சினைகள் குறித்து இருவரும் பேச்சு நடத்தினார்கள்.

இதையடுத்து அதிகாரிகள் மட்டத்தில் இரு தரப்புப்பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

தொழில்துறை, தகவல் தொழில்நுட்பம், பாதுகாப்பு, வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்தானது.

நேற்று மாலை புட்டின் காங்கிரஸ் தலைவி சோனியாவைச் சந்தித்துப் பேசினார். முன்னதாகப் புட்டினுக்கு மன்மோகன்சிங் மதிய விருந்தளித்தார். இரவு புட்டின் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமைச் சந்திக்கிறார். புட்டினைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு அப்துல்கலாம விருது கொடுக்கிறார். இன்று புட்டின் இராணுவ அமைச்சர் பிரணாப்முகர்ஜி, துணைக்குடியரசுத் தலைவர் செகாவத் ஆகியோர் சந்திக்கிறார்கள். மேலும் புதுடில்லியில் இந்தியா-ரஷ்ய கூட்டு விமானப்படை மற்றும் ஏவுகணைத் திட்டதையும் ரஷ்ய சனாதிபதி தொடக்கி வைத்தா் பின்னர் பெங்களூர் சென்று தகவல தொழில் நுட்ப மையத்தையும் தொடக்கி வைக்கவுள்ளார்.

# வரவு-செலவுத் திட்டம் தோற்கடிப்பால் இஸ்ரேலில் 5 அமைச்சர்கள் பதவி நீக்கம்!

(டெல்அவில்)


இஸ்ரேல் அரசில் இருந்து, ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஷினுய் கட்சியைச் சேர்ந்த 5 அமைச்சர்களை நீக்கி பிரதமர் ஏரியல் ஷரோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசு தாக்கல் செய்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் (நெஸ்லெட்) புதன் கிழமை தோற்கடிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது 120 உறுப்பினர்களைக் கொண்ட இஸ்ரேல் பாராளுமன்றத்தில் 69 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 43 உறுப்பினர்கள் தான் ஆதரவாக வாக்களித்தனர். ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள இரண்டாவது பெரிய கட்சியான ஷினுய் கட்சி எதிர்த்து வாக்களித்ததால் அரசுக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டது. இதையடுத்து அக் கட்சி சார்பில் அரசில் இடம்பெற்றுள்ள 5 அமைச்சர்கள் நீக்கப்படுவதாக பிரதமர் ஷரோன் அறிவித்தார்.

பழமைவாத தோரா யூதயிசக் கட்சியின் 5 உறுப்பினர்கள் ஆதரவைப் பெறுவதற்காக அக்கட்சிக்கு ஷரோன் அரசு ரூ.594 கோடி தர முடிவெடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடித்ததாக ஷினுய் கட்சி கூறியுள்ளது.

# சீனாவில் உலக அழகிப் போட்டி

உலக அழகிப் போட்டி சீனாவின் தீவுப் பகுதியான சான்யாவில் இன்று நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் 107 நாடுகளைச் சேர்நத அழகிகள் கலந்து கொள்கிறார்கள். போட்டிகளில் கலந்து கொள்ளும் அழகிகள் பல்வேறு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இப்போது சான்யா நகருக்குச் சென்றுள்ளனர். உலக அழகிப் போட்டியில் இந் தியாவின் சார்பில் சாயாலி பகத் கலந்து கொள்கிறார். இறுதிப் போட்டியையொட்டி நடக்கும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் அழகிகளின் அணிவகுப்பு ஆகியவற்றை உலகம் முழுவதும் 200 கோடிக்கும் மேற்பட்டவர்கள் தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கிறார்கள். இந்தப்போட்டி மூலம் கிடைக்கும் தொகையில் பெருந்தொகைப்பணம் எய்ட்ஸ் நோய் ஒழிப்புக்கு செலவிடப்படவுள்ளது.



ஆர்ஜென்டீனாக் கலைஞரினால் கடந்த காலத்திற்குரிய கண்காட்சிக்காக வழங்கப்பட்ட மண்டை ஓட்டில் கண் இருந்த பகுதியில் புஷ்சின் பல படங்கள் உள்ளதான தோற்றம்.

## கும்ளேக்கு கபில் பாராட்டு

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய (434) இந்திய வீரர் என்ற பெருமைக்குரியவர் கபில்தேவ். அவரது சாதனையை நேற்று முன் தினம் கும்பிளே சமன் செய்தார்.

சாதனையை சமன் செய்த கும்ளேக்குகபில்தேவ்தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார். அத்தோடு 500 விக்கெட்டை தாண்ட வேண்டும்என்றும்ஊக்கம் அளித்தார். இளைஞர்களுக்கு கும்ளே ஒரு முன்மாதிரி என்றும் அவர் பாராட்டி உள்ளார். அணித்தலைவர் கங்குலி, முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பிஷன்சிங் பெடி உட்பட பலர் கும்ளேவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



## ஆட்டத்தை வெற்றிப் பாதையில் திருப்பியவர் ஹர்பஜன்
## அணித் தலைவர் கங்குலி புகழாரம்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்திய கிரிக்கெட் ஆட்டத்தை வெற்றிப்பாதையில் திருப்பியதே ஹர்பஜன்சிங்தான் என்று இந்திய அணித் தலைவர் கங்குலி புகழாரம் சூட்டினார். பரபரப்பான கொல்கத்தா ஆட்டத்திற்குப் பிறகு நடந்த பரிசளிப்பு நிகழ்ச்சியில் பேசுகையில், ஹர்பஜன்சிங்கைப் பாராட்டிப் பேசிய கங்குலி, இந்தியா எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்தியதில் அனில்கும்ளே பெரும் பங்களிப்பு செய்ததையும் பாராட்டத் தவறவில்லை.

வெற்றி, தோல்வி இல்லாது சமநிலையில் ஆட்டம் முடியப் போகிறதோ என்று நான் அஞ்சினேன். ஆயினும் சுழற்பந்து வீச்சாளர்களின் அபாரா பந்து வீச்சினால் வெற்றிக்கனியை இந்தியா தட்டிப்பறித்தது. பந்து வீச்சாளர்களுக்கு கைகொடுப்பதாக ஆட்ட மைதானம் இருக்கவில்லை. ஆயினும், சுழற்பந்து வீச்சாளர்கள் அபாரமாகப் பந்துவீசினர். அனில் கும்ளேயும் நன்றாகத்தான் பந்து வீசினார். ஆயினும் போதுமான விகெட்டுக்களை வீழ்த்த முடியவில்லை. இருந்தபோதிலும் அவர் மிகவும் சிக்கலான பந்து வீச்சுக்களால் எதிரணியை திணறச் செய்தார். ஹர்பஜன்சிங்கோ நிலைமையை தலைகீழாக மாற்றியதுடன் இந்திய அணியை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றார். இந்தியாவுக்கு அதிகபட்ச விக்கெட்டுக்களைக் குவித்ததில் கபில்தேவ் சாதனையை அனில் கும்ளே எட்டிப்பிடித்திருக்கிறார். பல ஆண்டுகளாக அவர் ஒரு உறுதியான ஆட்டக்காரராக இருந்து வருகிறார். கடந்த 10 ஆண்டுகாலமாக நான் கும்ளேயுடன் சேர்ந்து விளையாடி வருகின்றேன். அவரது உறுதிப்பாடு இன்னும் ஆட்டங்களில் பளிச்சிடுகிறது என்று கங்குலி உற்சாகத்துடன் கூறினார்.

## 3ஆம் இடம்

டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் ஒவ்வொரு நாடுகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. அதன் படி அவுஸ்திரேலியா (130 புள்ளிகள்) தொடர்ந்து முதல் இடம் வகிக்கிறது. இங்கிலாந்து (109 புள்ளிகள்) 2-ஆவது இடம் பிடித்துள்ளது. தென் ஆபி ரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்தொடரை வென்றதன் மூலம் இந்திய அணி (107 புள்ளிகள்) 3-ஆவதுஇடத்திற்கு முதல்முறையாக முன்னேறியுள்ளது. முன்பு 5-ஆவது இடத்தில் இருந் தது.

## ஷோன் போலக் இரட்டைச் சாதனை



தென்ன பிரிக்க கிரிக்கெட் அணியின் சகலதுறை வீர் ஷோன் போலக் அபூர்வமான இரட்டைச் சாதனையைப் படைத்தார். கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் டெஸ்ட் போட்டிகளில் 3 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த சாதனையும், 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய மற்றொரு சாதனையையும் போலக் ஏற்படுத்தினார். தென்னாபிரிக்காவின் இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தில் போலக் 6 ஓட்டங்கள் எடுத்தபோதிலும் அந்த சாதனையை எட்டிப்பிடிக்க கைகொடுத்தது.

கிரிக்கெட் உலகில் கபில் தேவ், இயான் போத்தம், ரிச்சர்ட் ஹாட்லி, இம்ரான்கான் ஆகியோர் இத்தகைய சாதனையாளர்களாக உள்ளனர். அவர்களுடன் போலக்கும் தற்போது சேர்ந்திருக்கிறார்.

## சுழற்பந்து வீச்சாளர் இல்லாததே எமது தோல்விக்குக் காரணம்
### தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்சிமித்



எமது அணியில் சுழற்பந்துவீச்சாளர்கள் இல்லாததே தோல்விக்கு காரணம் என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்சிமித் தெரிவித்தார்.

கொல்கத்தா டெஸ்டில் தென் ஆபிரிக்க அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவிடம் தோற்றது. தோல்வி குறித்து தென் ஆபிரிக்க அணித் தலைவர் சுமித் கூறுகையில்; "எங்கள் அணியில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெறவில்லை. ஆசியக் கண்டத்தில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் இல்லாமல் ஆடுவது பலவீனமாகும். இளம் வீரர்களை கொண்ட எங்கள் அணி கௌரவமான முறையில் இந்த தொடரில் விளையாடி இருக்கிறது" என்றார்.

## 500 விக்கெட்டுக்களை வீழ்த்தும் சாத்தியம்
### அனில் கும்ளே



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவின் முன்னாள் வீரர் கபில் தேவின் சாதனையைச் சமன் செய்துள்ள தற்போதைய பந்து வீச்சாளர் அனில் கும்ளே 500 விக்கெட்டுக்களை வீழ்த்துவது சாத்தியம் என்றும் கடினமாக உழைத்து அந்த இலக்கை எய்தும் முதல் இந்திய வீரராக இருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

கும்ளே 90 டெஸ்ட் போட்டிகளில் 434 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். கபில் தேவ் 131 போட்டிகளில் ஆடி 434 விக்கெட்டுக்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக கபில்தேவ் கூறும் போது, கும்ளே நிச்சயம் அவரது இலக்கை எய்தி விடுவார் என்றார்.

எனினும் கும்ளே 2001 ஆம் ஆண்டு தோள் மூட்டில் காயம் ஏற்பட்டதிலிருந்து அவரின் பந்து சுழலும் வேகத்தை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பங்களாதேசுக்கு எதிரான ஒருநாள் போட்டி இந்திய அணியில் லக்ஸ்மன், கும்ளே நீக்கம்



இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் வங்கதேசம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3ஒருநாள் போட்டியில் மோதவுள்ளது. இந்தப்போட்டியில் கலந்து கொள்ளும் இந்திய அணி வீரர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டனர். வங்கதேசஅணி சவால் குறைந்த அணி என்பதால் இளம் வீரர்கள் சிலருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. அனுபவம் மிக்க லட்சுமன் மற்றும் கும்ளே ஆகியோர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக இளம் வீரர்களான டோனி, ஜோகிந்தர்ஷர்மா ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள் ளது. டோனி விக்கெட் காப்பாளர் என்ற முறையில் மட்டும் அல்லாமல் துடுப்பாட்டத்தில் சாதித்து வருவதால் அவரைப் பரிசோதித்துப் பார்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அது போல் ஸ்ரீராம் அணியில் நீடிக்கிறார்.வங்கதேச அணிக்கு எதிரான போட்டி வருகிற 23, 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நடக்க இருக்கிறது. இந்தப்போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் விவரம் வருமாறு, சவுரவ் கங்குலி (தலைவர்) ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், ராவிட், யுவராஜ்சிங், முகமது காய்ப், தினேஷ் மொங்கியா, ஸ்ரீராம், டோனி, ஹர்பஜன் சிங், இர்பான் பதான், அகர்கர், ஜாகீர்கான், முரளிகார்த்திக், ஜோகிந்தர் சர்மா.




## தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டி மிகமிக முக்கியமானது-அன்ரு பிளின்டொப்



இவ்வருடம் முழுவதும் தனது அணியினர் நன்றாக போட்டிகளில் ஆடி அணிக்கு வெற்றிகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றனர். எனினும் தென்னாபிரிக்க அணியோடு விரைவில் நடக்கவுள்ள போட்டிகளிலும் திறமையை வெளிப்படுத்தாது போனால் இவ்வளவு நாள் பெற்ற வெற்றிகளும் வீணாகிப் போய்விடும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் அன்ருபிளின்டொப் தெரிவித்துள்ளார். அத்துடன் அது அணி வீரர்களின் கடினமான ஒத்துழைப்பு என்றும், ஆயினும் தென்னாபிரிக்கா வுடன் இதற்கு முன்பு நடைபெற்ற போட்டியில் தோல்வியடைந்தது வருந்தத்தக்கது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், உலக தரவரிசையில் தனது அணியை இரண்டாவது இடத்துக்கு இட்டுச்செல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

தற்போது சிம்பாப்வே அணியுடனான போட்டிகளில் இருந்து பிளின்டொப் விலகியுள்ளார். அவருடைய துடுப்பாட்டமும் பந்து வீச்சும் குறிப்பிடத்தக்களவு அணியின் வெற்றிக்கு பங்களித்தது. இது பற்றி அவர் கூறுகையில், தனக்குப் புதிதாகப் பிறந்த மகனின் அதிர்ஷ்டம் என்றார்.பிளின்டொப் இவ்வருடம் 16 இன்னிங்சுகளில் மொத்தம் 803 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

## 15 பேர் கொண்ட சிறிலங்கா அணி அறிவிப்பு

நியூசிலாந்து சுற்றுலாவுக்கான 15 பேர் கொண்ட சிறிலங்கா கிரிக்கெட் அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 15ஆவது வீரராக இணைக்கப்பட்டுள்ளார். அத்துடன், நீண்ட காலத்திற்குப் பின்னர் ரசல் ஆனால்ட் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இவரை விட பாகிஸ்தான் சுற்றுலாவின்போது அணியில் இருந்து நீக்கப்பட்ட திலகரட்ண டில்சான் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். முரளிதரன் இவ்வணியில் இணைக்கப்பட்டிருந்தாலும் இச்சுற்றுப் போட்டியில் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து சிம்பாப்வே மூன்றாவது போட்டி இன்று

வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையே 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் ஹராரேயில் நடைபெற்ற முதல் இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இந்த நிலையில் இரு அணிகள் இடையேயான 3ஆவது ஒரு நாள்போட்டிபுலவாயோ நகரில் இன்று நடக்கிறது. இப்போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றால் தொடரை வென்று விடும் இதனால் இந்த ஆட்டம் சற்று விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வோகன் (தலைவர்) ஸ்ரோஸ் சோலாங்கி, ஜேம்ஸ், ஆண்டர்சன், இயன்பெல், காலிங்வூட், ஜோன்ஸ், பீட்டர்சன், வார்ப்,சைமன் ஜோன்ஸ் ஹைல்ஸ் டரன்கவ்,

சிம்பாவே, தைபு (தலைவர்) இப்ராகிம், டெய்லர், மட்டிஸ், கென்யரி, வெர்மூலன், சிக்கும்பரா இவிங், பயன்கரா உத்சயா, மசகட்ஸ்.



டேவிஸ் கிண்ணத்துடன் கார்லொஸ் பெரேரோ, அன்ரு ரொடிக்.



கால்பந்து உலகில் இன்றும் நட்சத்திர வீரராகத் திகழும் இங்கிலாந்து கால்பந்து அணித் தலைவர் டேவிட் பெக்காம்


## அவுஸ். பயிற்சிப் போட்டி பாக். அணிக்குத் தோல்வி



அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பாக நடைபெற்ற மேற்கு அவுஸ்திரேலியாவின் 2ஆவது அணியுடன் நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் பாகிஸ்தான் 10 ஓட்டங்களால் தோல்வியடைந்துள்ளது.

மூன்று நாட்கள் நடைபெற்ற போட்டியில் 94 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் 83 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தது. யூசுப் யுகானா (41), யுனிஸ்கான் (28) மட்டுமே இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பயிற்றுநர் பொப்வூல்மர், அனுபவமிக்க வீரர்களினதும் புதிய வீரர்களின தும்குறையைஇதுவெளிப்படுத்துவதாக உள்ளதென்று கூறியுள்ளார்.



## சிந்தனைக்கு

மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு, மற்றும் சூழ் நிலைகள் தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பின்னடிப்பு

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலம் தாமதிக்காமல் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு தமிழீழத் தேசியத்தலைவர் மாவீரர் நாள் உரை மூலம் விடுத்த வேண்டுகோளுக்குச் சனாதிபதி சந்திரிகா தரப்பில் இருந்து நேரடியான பதில் எதுவும் இது குறித்து கிடைக்கப்பெறவும் இல்லை. இதுதவிர சனாதிபதியிடம் இருந்து மக்களுக்குக் கூடப் பகிரங்கமாக அறிவிப்பு எவையும் விடுக்கப்படவுமில்லை.

ஆனால் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் அறிவிப்பிற்குப் பதில்அளிப்பது போன்று சிறிலங்கா அரசின் தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையில் அரசாங்கம் மிகவும் நழுவல் தனமானதொரு போக்கைக் கடைப் பிடிப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. அதாவது விடுதலைப் புலிகளின் கோரிக்கையை வெளிப்படையாக நிராகரிப்பது போன்றில்லாது, ஆனால் அடிப்படையில் புலிகளின் கோரிக்கையை அரசு முற்றிலும் நிராகரிப்பதாக அவ் அறிக்கை உள்ளது.

இந்தவகையில் தகவல் திணைக்களத்தின் அறிக்கை இரண்டு வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒன்று சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடாக தகவல் திணைக்களத்தின் அறிக்கையைக் கொள்ளலாமா என்பது. ஏனெனில் நாம் இதனை அரசாங்கத்தின் நிலைப்பாடாக எடுத்துக்கொண்டாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனை ஏற்றுக்கொள்வாரா என்பது முக்கியமானதாகும்.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேளைக்கொன்று பேசுபவர் மட்டுமல்ல, தானே கூறியவற்றைத் தானே மறுப்பதற்கும் தயங்காதவர். ஆகையினால் தகவல் திணைக்களத்தின் அறிக்கை அதிகாரிகளின் அறிக்கையே தவிர அரசின் நிலைப்பாடு அதுவல்ல எனவும் அவர் மறுத்துரைத்தல் கூடும்.

இரண்டாவதாக இவ்வறிக்கைகளின் மூலம் வெளிப்படும் செய்தியானது விடுதலைப்புலிகளின் கோரிக்கை அரசினால் நிராகரிக்கப்படுகின்றது என்பதாகும். ஆனால் இவ்வறிக்கைகளில் நிராகரிப்பது என்ற சொல்பயன்படுத்தப்பட்டதாக இல்லை. இதன் நிமித்தம் இவ் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகள் ஏதேனும் முடிவிற்கு வரும் பட்சத்தில் அரசாங்கத்தரப்போ சனாதிபதி சந்திரிகாவோ தாம் இவ்வாறு கூறவில்லை என மறுத்துரைக்கக்கூடும். இதுவும் சனாதிபதி சந்திரிகாவிற்குப் புதிதான தோன்றல்ல.

இதனைத்தவிர தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையானது விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு நிபந்தனை விதிப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்க முனைகின்றது. ஆனால் தேசியத்தலைவர் பிரபாகரனின் பேச்சில் புதிய நிபந்தனைகளோ மாற்றங்களோ எதுவுமே இல்லை.

ஒருபுறத்தில் இடைக்கால நிர்வாகசபை குறித்துப் பேசவாருங்கள் என்பது முன்னைய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகக் கோரப்படுகின்றதேயொழிய, இது ஒரு நிபந்தனையல்ல. ஆனால் தேசியத்தலைவர் தனதுஉரையில் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இனியும் அரசியல் சூனிய நிலையில் இருக்கத்தயாராக இல்லை. பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்பதே அதுவாகும்.

ஆனால் அரசாங்கம் தனது கடந்தகால நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத்தயாராக இல்லை. மாறாக, விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளுக்கு புதிய நிபந்தனைகளை விதிப்பதுபோன்றும் காட்டிக்கொள்ள விரைகிறது. இதன்மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் புலிகள் முட்டுக்கட்டை போட விளைவதாகச் சர்வதேச சமூகத்தின் முன் காட்டிக்கொள்ள விரும்புகின்றது.

அரசாங்கத்தின் குறிக்கோள் எதுவாக இருப்பினும் சரி, தென்னிலங்கையின் தற்போது உருவாக்கப்பட்டுள்ள சூழ்நிலை சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வொன்று காண்பதற்குச் சனாதிபதி சந்திரிகாவால் இயலப் போவதில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா விரும்பியோ, விரும்பாமலோ அவரால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதென்பது சாத்தியமாகப் போவதில்லை. ஏனெனில் இடைக்கால நிர்வாகசபை குறித்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் தெற்கில் ஆயுதக்கிளர்ச்சி வெடிக்கும் என ஜே.வி.பி எச்சரித்து வருகிறது.

ஜே.வி.பி.யின் இவ் எச்சரிக்கையானது பூச்சாண்டி காட்டும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமல்ல, ஜே.வி.பி ஓர் ஆயுதக் கிளர்ச்சியை நடத்தினால் அதில், அதனால் வெற்றிபெறமுடியாது என்பது வேறுவிடயம். இதற்கு கடந்தகால அனுபவங்களே பதில்கூறும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் கோரிக்கைக்கு நேரடியாகப் பதிலளிக்காது இருப்பதும், தகவல் திணைக்களம் மூலம் மறைமுகமாக அறிக்கை வெளியிடுவதும், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான நிலைப்பாட்டில் உறுதியானதொரு நிலையை அரசு கொண்டிருக்கவில்லை என்பதையே உறுதிசெய்வதாக உள்ளது. ஆனால் அரசாங்கம் இதனை மூடிமறைத்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் புலிகளே இடையூறாகவுள்ளனர் போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்க முனைகின்றது. ஆனால் அரசின் இந்நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும், அன்றி ஆதரிக்கும் எவரும் நீதியானவர்களாகவோ, நடுநிலையானவர்களாகவோ இருக்க முடியாது என்பது மட்டுமல்ல, யுத்த விரும்பிகளாகவே இருக்க முடியும்.

-அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்போது?-

# தேர்தல் ஆணையாளர் அறிவிக்க வேண்டும்; சட்டத்தரணி மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் உரிய திகதியை அறிவிக்க தேர்தல் ஆணையாளர்களுக்கு உத்தரவிட வேண்டும் எனக்கோரி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி தர்மதாஸ கோமஸ் என்பவர் இதனை தாக்கல் செய்துள்ளார். 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முதல் தடவையாக அதேமாதம் 30 ஆம் திகதியும் பின்னர் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதியும், இரண்டு தடவைகள் பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டார். இந்த நிலையில் அடுத்த சனாதிபதித் தேர்தல் 2005ஆம் ஆண்டு இடம்பெறுமா அல்லது 2006 ஆம் ஆண்டில் இடம் பெறுமா என்பதை தேர்தல் ஆணையாளர் அறிவிக்க வேண்டும் என மனுதாரர் தமது மனுவில் கேட்டுள்ளார். (32)

# வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் ஐ.தே.க விலகியிருந்தது

பாராளுமன்றத்தில் நேற்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாத வாக்கெடுப்பில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகியிருந்தது.

தமது ஆட்சியின் போது வெளிநாட்டமைச்சின் மூலம் 4.5 பில்லியன் டொலர்களை நாட்டுக்குக் பெற்றுக்கொடுக்கும் முகமான இணக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய வெளிநாட்டமைச்சரால் எவ்வித நன்மையும் நாட்டுக்குக் கிடைக்கவில்லை. என்பதை சுட்டிக்காட்டியே ஐக்கிய தேசியக் கட்சி இந்த வாக்கெடுப்பில் இருந்து விலகி இருந்தது. எனினும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.மகேஸ்வரன் மற்றும் ராதாகிருஸ்ணன் ஆகியோர் வாக்கெடுப்பின் போது தமது வாக்குகளை எதிராக அளித்தனர்.

இதேவேளை இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, சிரேஷ்ட ராஜதந்திரியான ஜயந்த தனபால ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பதவிக்கு பிரேரிப்பதற்கு முயற்சிகளை அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதற்கு ஐக்கிய தேசிய கட்சியும் தமது ஆதரவை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# வட-கிழக்கு ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ

வடக்கு கிழக்கு புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ நியமிக்கப்படவுள்ளார். இவர் எதிர்வரும் 6ஆம் திகதி சனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த அவர் கடந்த பாராளுமன்ற தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தமக்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஒதுக்கித்தரும் என நம்பிக்கை கொண்டிருந்தார்.

எனினும் அது கிடைக்காமல் போகவே சனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அவர் இணைந்து கொண்டார்.

இந்த நிலையில் வடக்கு கிழக்கு ஆளுநராக இருந்த அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டதை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப் பட்டுள்ளார். (32)

# அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகளும் சுங்கப் பரிசோதனைக்கு உள்ளாவர்

–சனாதிபதி சந்திரிகா உத்தரவு

இலங்கையர் ஒருவர் வெளிநாடு செல்லும் போதும் தாய் நாடு திரும்பும் போதும் அவர் தொடர்பாக நடைமுறையில் இருக்கும் சட்ட திட்டங்களை அமைச்சர்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகளும் பின்பற்ற வேண்டுமென சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சனாதிபதி மேலும் தெரிவிக்கையில், இந்த நடைமுறை ஏனைய நாடுகளிலும் பொதுவாக கடைப்பிடிக்கப்படும் விதி முறையாகும். இதன்படி அனைவரும் சுங்கப்பரிசோதனைகளுக்கு கட்டாயம் உட்படுத்தப்படுவார்கள் என்றும் சனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த கட்டளையை நடைமுறைப்படுத்துமாறு நிதியமைச்சர் சரத்அமுனுகம சுங்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர்களில் இருந்து பிரதேசசபை உறுப்பினர்கள் வரை இந்த சட்ட திட்டங்கள் நடைமுறைக்கு உட்படுத்த இதன்படி இவர்கள் சுங்கப் பரி சோதனைகளுக்கும் சுங்க விசாரணைகளுக்கும் உள்ளா வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுங்கப் பரிசோதனைகளின் போது சுங்க அதிகாரிகளுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாக சுங்கப் பணிபபாளர் நாயகம் இதனை- சனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளாா.

# ராஜதந்திர சேவைகளுக்கு 10 பேரின் பெயர்கள் அறிவிப்பு

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு ராஜதந்திர சேவைகளில் சில புதிய நியமனங்களை செய்ய விருப்பதையடுத்து சில புதிய தூதுவர்களின் பெயர்களை பொது மக்களின் பார்வைக்காக முன் வைத்துள்ளது.

அரசாங்கத்துறையிலும் அரச கூட்டுத்தாபனம் பதவிகள் தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற உயர் பதவிக் குழு உத்தேசிக்கப்பட்டுள்ள 10 தூதுவர்களின் பெயர் விவரங்களை அறிவித்துள்ளது. இதன்படி தற்போது சிறிலங்காவிற்கான அவுஸ்திரேலிய தூதுவராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா இந்தோனேசியாவிற்கான தூதுவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவிற்கான புதிய தூதுவர் பதவிக்கு சனாதிபதியின் முன்னாள் செயலாளரான கே.பாலபட்ட பெந்தியின் பெயர் பட்டியலில் இருக்கிறது. ஏனையோரின் பெயர்களும் அவர்களை நிய மிப்பதற்காக முன் வைக்கப்பட்டுள்ள நாடுகளும் வருமாறு:- தற்போது சுவிஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கான தூது வராகப் பணியாற்றும் சி.டி.காசிச் செட்டி- மலேசியா, தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவராகப் பணியாற்றும் எம்.என். யுனைட் - ஐக்கிய அரபு இராச்சியம், முன்னாள் தேர்தல் ஆணையாளர் சந்திரா டீ சில்வா - கனடா திருமதி. சேனுகா செனவிரத்ன அமெரிக்கா எம்.எல்.எம்.பாருக்- மாலை தீவு, எம்.கே.என் கீரன் கென்யா, டபிள்யூ.எஸ். இரத்தினவேல் - சிங்கப்பூர் என்பவர்கள் அந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

# தென்னாபிரிக்காவில் தமிழர்கள்

# எழுச்சியுடன் அனுஷ்டித்த மாவீரர் நாள்

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் ஈழத் தமிழர்களும் இணைந்து ஏற்பாடு செய்த மாவீரர் நாள் நிகழ்வுகள் மண்டபம் நிறைந்த மக்களுடன் சர்ட்ஸ்பேத் ஏரிக்கரை அருட்பா கழகத்தில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பித்த நிகழ்வில் மங்கல விளக்கை திருமதி சிறீதேவி பத்மநாதன் ஏற்றிவைத்தார். திருநாவலர் நிகழ்வில் சிறப்புரையாற்றினார். தமிழரின் விடிவை எடுத்தியம்பும் இரண்டு நாட்டிய நிகழ்ச்சிகளை குமாரி சிவானி சின்னப்பன் வழங்கினார். தமிழ் இளைஞர்கள் நிகழ்வில் எழுச்சி கீதங்களை இசைத்தனர். தென்னாபிரிக்கா தனது விடுதலைப் பாதையில் சந்தித்த சவால்கள் பற்றி திருமதி மகி கொவன்டர் சிறப்புரையாற்றினார். இதர தமிழ்க் கழகங்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



# மாற்றீடான வலுவுள்ளோர் தினம்

# நேற்று கிளி.யில் சிறப்பு அனுஷ்டிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ரீதியில் கொண்டாடப்படும் மாற்றீடான வலுவுள்ளோர் தினம் கிளிநொச்சியிலும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக மாற்றீடான வலுவுள்ளோரின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தலைமைச் செயலகத்திலிருந்து காலை 10.00 மணியளவில் மங்கல வாத்தியம் முழங்க சிறப்புவிருந்தினர்கள், விருந்தினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.





அங்கு விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், வணபிதா அனுகுல அடிகளார், கிளி.முல்லை மாவட்ட குருமுதல்வர் தேவசகாயம் அடிகளார், அருட்சகோதரி லூட்ஸ்யோசப் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை சங்க அங்கத்தவரான உதயராசா ஏற்றிவைத்தார். அடுத்து நிறுவனக் கொடியினை ஊனமுற்றோர் சங்கத் தலைவர் தி. சிவமாறன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தலைமையுரையினையடுத்து வரவேற்புரையினை குழுச் செயலாளர் யூடிரமேஸ் நிகழ்த்தினார். ஆசியுரையினை குருமுதல்வர் தேவசகாயம் அடிகளார் வழங்கினார்.

அடுத்து அங்கத்தவரை காண்டீபன், தேவசகாயம் அடிகளார், அருட்சகோதரி லூட்ஸ்யோசப், சோபா நிறுவன பிரதிநிதி வேர்டீன், பனை தென்னைவள இணைப்பாளர் மாணிக்கம், சர்வோதய இணைப்பாளர் மணியம் ஆகியோர் மாலை அணிவித்து கௌரவித்தனர். அடுத்து சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார். மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி வேலாயுதம், சர்வோதய இணைப்பாளர் மண்ியம், வணபிதா அனுகுல அடிகளார், அழகியல் கலாமன்றத்தைச் சேர்ந்த விஜயசேகரன் மற்றும் அங்கத்தவர் சார்பாக சிவமாறன் ஆகியோரது உரைகள் இடம்பெற்றது.

தொடர்ந்து ஊனமுற்றோர் சங்கத்தால் கேட்கப்பட்ட வினாவிடைப் போட்டிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டது. பின்னர் அங்கத்தவர்களின் இன்னிசைக் கானம் நடைபெற்றது.

அடுத்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து மாற்றீடான வலுவுள்ளோருக்கும் அன்பளிப்புப் பொருட்கள் சில வழங்கப்பட்டன. தொடர்ந்து நன்றியுரையினை நிறுவன இணைப்பாளர் ம. அன்ரன் நிகழ்த்தினார். (கு,ச)

# முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நகர் தாண்டவன் வெளியிலுள்ள விடுதியொன்றில் குடும்பத்துடன் தங்கியிருந்த ஒருவர் நேற்று மாலை 6.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த ஜோண்பிள்ளை சந்திரமோகன் (வயது-33) என அடையாளம் காணப்பட்டுள்ள இவர், கடந்த சில மாதங்களாக ஐரோப்பிய நாடொன்றிற்குச் செல்வதற்காக தனது மனைவி, மக்களுடன் இந்த விடுதியில் வாடகைக்கு தங்கியிருந்துள்ளார். (ஏற்கனவே தினக் கதிர் பத்திரிகை நிறுவனம் அமைந்திருந்த கட்டடம்). இவர் ஏற்கனவே பொலிஸ் சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர் எனத் தெரிய வந்துள்ளது. விடுதியின்பின் பக்கம் வெளியே குளித்துக் கொண்டிருந்த சமயம் பின்புறத்தால் வந்த துப்பாக்கிதாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளார்கள். தற்போது மட்டக்களப்பில் பெய்து வரும் பருவமழை காரணமாக விடுதியின் பின்பக்க மதில் இடிந்து விழுந்துள்ளது. இவர் கைத் துப்பாக்கியினால் சுடப்பட்டு காயங்களுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் அங்கு மரணமானார்.

# தமிழீழ ஊர்தி பதிவுப் பகுதியால் ஊர்திப் பதிவும், வரி அட்டை வழங்கலும்

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரால் இதுவரை தமிழீழப் பதிவு மேற்கொள்ளப்பெறாத ஊர்திகளுக்கு பதிவினை மேற்கொண்டு, 2005ஆம் ஆண்டிற்கான வரி அட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரால் கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதிகளில் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளதென தமிழீழ போக்குவரத்துப் பிரிவுப் பதிவாளர் தெரிவித்துள்ளார். மேற்படி நடவடிக்கைகள் பின்வரும் திகதிகளில் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் வைத்து காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை பதிவுகள் இடம்பெறவுள்ளது. 11ஆம் திகதி முல்லைத்தீவு, 12ஆம் திகதி முள்ளியவளை, 13ஆம் திகதி நெடுங்கேணி, 14ஆம் திகதி கனகராயன்குளம், 15ஆம் திகதி ( ழங்காவில், 16ஆம் திகதி விடத்தல்தீவு, 20ஆம் திகதி மடு, 22ஆம் திகதி மருதங்கேணி, 23ஆம் திகதி பளை, 27ஆம் திகதி பூநகரி, 28ஆம் திகதி புளியங்குளம்.

ஊர்திப் பதிவினை மேற்கொள்ள வருகை தரும்போது உரிமையாளர்கள் நிழற்படம் கறுப்பு வெள்ளை பழைய கடவுச்சீட்டு அளவானது, குடும்ப அட்டை, ஆயப்பகுதி தீர்வைச் சான்று நிழற்பிரதியுடன், சிறிலங்கா ஆவணங்கள் அனைத்தும் நிழற்பிரதியுடன் மற்றும் பிணையாளியுடன் பிணையாளியுடைய குடும்ப அட்டையினையும் கொண்டு வருதல் வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர். (சோ)

## இரு...

சங்கானையைச் சேர்ந்த அ.சிவதாசன் (வயது 44) ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச.நிஷாந்தன் (வயது 15) சாவகச்சேரியைச் சேர்ந்த நா.தயாளினி (வயது12) சாவகச்சேரியைச் சேர்ந்த செ.லெவ்லீஸ் (வயது 27) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மி.இல்மிலன் (வயது 80) ஆகியோரே காயமடைந்துள்ளனர். (33)

## சிறி...

மலையக பகுதிகளில் உள்ள ஆலயங்களில் விசேட பூசைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. இதனைத் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்டங்களாகக் கருதியே இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த விசாரணைகளுக்காக சில இந்து குருக்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.(32)

## அரசின்...

பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று மகஜர் கையளிக்கப்பட்டது. இம்மகஜர் சிறிலங்கா சனாதிபதி, பிரதம மந்திரி, எதிர்க்கட்சித்தலைவர், இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர், நோர்வே வெளிவிவகார அமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், வடக்கு கிழக்கு ஆளுநர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் உட்படப் பலருக்கும் கையளிக்கப்பட்டது. (10)

## நோர்வே...

துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேசிய நோர்வேத் தூதுவர்கான்ஸ் பிறஸ்கர் பேச்சின் உள்ளடக்கம் பற்றி நோர்வேக்கு தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விளக்கியுள்ளார். இதற்கிடையில் பேச்சுக்கள் தொடர்பான புலிகளின் பிந்திய அறிவிப்புப் பற்றி சிறிலங்கா அரசு விடுத்த அறிக்கையையும் நோர்வே பரிசீலித்திருக்கிறது. இதை அடுத்து சூல்ஹெய்ம் தனது பயணத்தைப் பிற்போட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## த.வி.கூ...

ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்திற்கு வீ.ஆனந்த சங்கரியை ஏற்பது உட்பட்ட கட்சி உட்பூசல்கள் சம்பந்தமாக ஏற்பட்ட முரண்பாடுகளால் சம்பந்தப்பட்ட இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த பகைமை காரணமாக செல்லையா விஜயரட்ணம் என்பவரை கடுமையாகத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த செல்லையா விஜயரட் ணம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (33)

## வெளி...

கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றிருந்தாக உறவினர்கள் தரப்பில் கூறப்படுகின்றது. எனினும் பின்னர் அவர்கள் தொடர்பான தகவலேதும் கிடைக்கவில்லையெனவும், இந் நிலையில் குறித்த ஐரோப்பிய நாட்டிலிருந்து நண்பரான இளைஞன் கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. நாடு திரும்பிய இவ் இளைஞன் காணாமற் போனவர்களது பெற்றோருக்கு வழங்கிய தகவலையடுத்தே இச் செய்தி வெளியாகியுள்ளது.

"இதனிடையே குறித்த இளைஞர்கள் பயணித்த ஹைஏஸ் வான் கொழும்புப் பகுதியிலுள்ள கடற்படை தளமொன்றினுள் பாதை தவறி உட்புகுந்து விட்டதாகவும், அதனையடுத்து கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும், பின்னர் பொலிசார் ஊடாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்க உத்தரவிட்டதாகவும், முனைப்பகுதியிலுள்ள இராணுவ முகாம் பொறுப்பதிகாரியூடாக அனுப்பப்பட்ட மற்றோர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந் நிலையில் காணாமற் போன இளைஞர்களின் பெற்றோர், வடமராட்சி மீனவ சங்க சமாசமூடாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இவ் விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளனர். (27)

## ஜே.வி.பி...

இச்சந்திப்பு திருகோணமலை அரசியல்த் துறைச் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் ஊடகவியலாளர்கள் மத்தியில் மேலும் தெரிவிக்கையில்; பின்னர் அங்கிருந்து நகர் பகுதிக்குள் வரமுயன்றனர். அப்போது பொலிசார் அவர்களை நகர்ப் பகுதிக்குள் வரவிடாது கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தைச் செய்து கலைத்தனர்.

அங்கிருந்து ஓடிய அந்தச் சிங்கள மக்கள் மடத்தடிச் சந்தியில் போய் நின்று அங்கு தமிழ் மக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அலங்காரங்களை அறுத்தெறிந்தனர். இதனைத் தடுக்க முயன்ற அங்கிருந்த தமிழ் இளைஞர்களைப் படையினர் அடித்து விரட்டினர். பின்னர் உடனடியாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பிக்கப்பட்டு திருகோணமலை நகர்ப் பகுதியை அண்டிய பகுதிகளில் இருந்த சகல மக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில் வேடிக்கை என்னவெனில் ஜே.வி.பியினர் மாவீரர் நாள் கொண்டாடுவது தவறெனக் குழப்பம் விளைவித்தார்கள். ஆனால் இதே ஜே.வி.பியினர்கள் இந்த நவம்பர் மாத்தில் கார்த்திகை வீரர்கள் என்ற பெயரில் ஒரு நிகழ்வினை இங்கே செய்தார்கள். அந்நிகழ்வை கடந்த காலங்களில் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட ஜே.வி.பி.உறுப்பினர்களை நினைவு கூரும் முகமாகவே கொண்டாடினார்கள். அது தொடர்பான சுவரெட்டிகளும் இங்கே ஒட்டப்பட்டிருந்தன. ஆனால் இதன் போது இங்குள்ள எந்தவொரு தமிழராலும் இதற்கு எந்த இடையூறுகளும் விளைவிக்கப்படவில்லை. ஒரு கொடிகூட அறுக்கப்படவில்லை.

ஆனால் கடந்த மாவீரர் தின நிகழ்வுகள் போலவே இம்முறையும் திருகோணமலையில் மாவீரர்கள் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆனால் அத்தனையையும் குழப்பும் விதத்தில் ஜே.வி.பி.யினர் நடந்துகொண்டனர். இது திருகோணமலையில் ஒரு குழப்பகரமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே ஜே.வி.பியினர் இவ்வாறு செய்துள்ளனர் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.